# உயிர்



பிரக்ஞன்

# உயிர்

ஆசிரியர்

**ப்ரக்ஞன்**

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | உயிர் |
| **ஆசிரியர்** | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| **வெளியீடு** | : | பராபரம் பாடசாலை |
| **வகை** | : | உபதேசம் |
| **முதற்பதிப்பு** | : | 2025 |
| **பக்கங்கள்** | : | 45 |
| **விலை** | : | அக விழிப்பு |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |

# உயிர்

உயிரின் தோற்றமும், பரிணாமமும் என்பது, பூமியில் உயிர்கள் எவ்வாறு தோன்றின? எப்படி பரிணாம வளர்ச்சி அடைந்தன? என்பதைப் பற்றிய அறிவியல் அறிஞர்களின் ஆய்வுகளின் அடிப்படையில், உயிரினங்களின் வரலாறு, படிமங்கள், மரபியல் மற்றும் பல தகவல்களைப் பயன்படுத்தி உயிரினங்களின் தோற்றம், பரிணாமம், அதன் வகைப்பாட்டு, உயிரினங்களின் பரவல் மற்றும் இனப்பெருக்கம் ஆகியவற்றை அறிவியல் ஆய்வு செய்கிறது.

**ஓபாரின்** (1922) மற்றும் **ஹால்டேன்** (1929) என்ற வெளி நாட்டு அறிவியல் அறிஞர்கள் புவியில் நிலவும் சூழலுக்கு ஏற்ப, தொடர்ச்சியான வேதி வினைகள் மூலமாக உயிர் தோன்றியது என்ற கருத்தை முன்மொழிந்தனர். முதலில் தோன்றிய உயிர் ஏற்கெனவே இருந்த உயிரற்ற கனிம மூலக்கூறுகளில் இருந்து உருவாகி இருக்கலாம்.

இக் கனிம மூலக்கூறுகள் பல்வேறு கரிம மூலக்கூறுகள் உருவாக வழி வகுத்தன. இக் கரிம மூலக்கூறுகள் கூழ்மத் தொகுதிகளாக மாற்றம் அடைந்து உயிர்களை உருவாக்கின.

உயிரினத்தின் தோற்றம் பற்றிய வேதிப் பரிணாமத்தின் நவீன கருத்துக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன

பொதுவாக, பூமியில் உயிர்கள் எவ்வாறு தோன்றின என்பது பற்றிய கேள்வி. பல்வேறு கோட்பாடுகள் உள்ளன. அவற்றில் முக்கியமானது, உயிரற்ற மூலக்கூறுகளிலிருந்து உயிர்கள் தோன்றின என்பது அறிவியல் கோட்பாடு.

அவ்வாறே அறிவியல் இன்னும் சில கருத்துக்களை முன் வைக்கும்போது, காலப்போக்கில் உயிரினங்கள் எவ்வாறு ஒரு புதிய இனமாக மாறுகின்றன அல்லது வேறுபடுகின்றன என்பது **பரிணாமம்** ஆகும் என்றும், அத்தகைய பரிணாமம் என்பது மரபியல் மாற்றங்கள் மூலம் நிகழும் ஒரு செயல் முறையாகும் என்கின்றன.

இதிலே, உயிரிங்களின் படிமங்கள், உயிரினங்களின் அமைப்பு, மரபியல், மற்றும் உயிரியல் பண்புகள் ஆகியவைகள் பரிணாமத்தின் சான்றுகளாக அறிவியல் எடுத்துக் கொள்கின்றன. அந்த வகையிலே, பரிணாமத்தைப் பற்றி கூறிகின்ற **சார்லஸ் டார்வின்** மற்றும் இன்னும் சில விஞ்ஞானிகள் பரிணாமத்தை விளக்கும் கோட்பாடுகளைப் பற்றி கூறும்போது, உயிரினங்கள் படிப்படியாக பல்வேறு மாற்றங்களை சந்தித்தன என்றும், காலப் போக்கில் அவைகளின் உடல்களில் மாற்றம் நிகழ்ந்தன என்றும், மேலும், அவைகளின் உடல்கள் இன்று வரை பல்வேறு மாற்றங்களை அடைகின்றன என்றும் கூறுகின்றனர்.

இயற்கையின் மாற்றங்கள் மற்றும் மரபியல் கோட்பாடுகள், வரலாறுகள் ஆகியவைகள் பரிணாமத்தை விளக்கும் முக்கிய கோட்பாடுகளாக அறிவியல் முன் வைக்கின்றது. மேலும் கடந்த காலத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நடந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட **பெரு வெடிப்பு** நிகழ்வின் காரணமாக இந்த பிரபஞ்சம் படைக்கப்பட்டு, அதில் பூமி போன்ற கோள்களில் உயிரினங்கள் தோன்றி இருக்கலாம் என்ற கருத்தையும் அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஆக, இவர்களின் இத்தகைய கோட்பாடுகளின்படி உயிரற்ற பொருட் களிலிருந்து தன்னிச்சையாக உயிர் தோன்றியது என்றும், அந்த வகையிலே, மீன்கள் சேற்றில் இருந்தும், தவளைகள் ஈரமான மண்ணில் இருந்தும், பூச்சிகள் அழுகும் பொருட்களில் இருந்தும் தோன்றியதாக நம்பப்பட்டது.

**லூயிஸ் பாஸ்டர்** (1862) அவர்களின் ஊகப்படி முன்பிருந்த உயிரியில் இருந்துதான் உயிர் தோன்றியது. கிருமி நீக்கம் செய்யப்பட்ட, காற்றுப் புகாத குடுவையில் இறந்த ஈஸ்ட்களில் இருந்து உயிர் உருவாகவில்லை. ஆனால், காற்று உட்புகும் மற்றொரு குடுவையில், இறந்த ஈஸ்ட்களில் இருந்து புதிய உயிரினங்கள் தோன்றுகின்றன என்பதை நிரூபித்தார்.

புவிக்கு அப்பால் விண்வெளியில் இருந்து உயிர் தோன்றியதாக இன்றும் சில அறிவியலாளர்கள் கருதுகின்றனர். இதன்படி, உயிரின் அலகான ஸ்போர்கள் (பான்ஸ்பெர்மியா) புவி உள்ளிட்ட பல்வேறு கோள்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது என்பதாக, சில வானியல் அறிஞர்கள் இன்றும் இக்கருத்தைக் கொண்டுள்ளனர்.

ஆனால், நம் பண்டைய ரிஷிகள், சித்தர் பெருமக்கள் இத்தகைய அறிவியல் அறிஞர்களின் இன்றைய கண்டு பிடிப்புகளுக்கு பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே நமது தமிழ் சித்தர் **திருமூலர்** தமது திருமந்திரப் பாடலில் உயிரைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயி ரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது வாயிரமானால்
ஆவியின் கூறு நூரயிரத்தொன்றே. – **திருமந்திரம்**

திருமூலரின் கணக்குப்படி, ஜீவ அணுவின் அளவானது, மாட்டின் ஒரு மயிரை நூறு கூறிட்டு, பின்னர் அந்த ஒவ்வொரு கூறையும் ஆயிரம் கூறிட்டால் கிடைக்கும் ஒரு கூறின் அளவே அணுவின் அளவு.

அதாவது, திருமூலர் கூறுகின்ற ஆவி என்பது, நமது சாதரணக் கண்களுக்குப் புலப்படாத, மிக நுண்ணிய ஜீவ அணுவினுடைய பரிமாணம் என்றும், அது மிக, மிக நுண்ணிய மயிரின் இலட்சத்தில் ஒரு பங்கு என்பதாகப் புரிந்துக் கொள்ள வேண்டும் என்கின்றார்.

அதைத்தான் நவீன விஞ்ஞானம் நுண்ணிய, கண்களுக்குப் புலப்படாத **அணு** என்கின்றது.

ஆனால், நமது நாட்டில் பகுத்தறிவில்லாத ஒருசில மூடர்களால் கண்களுக்குப் புலப்படாத நுண்ணிய வடிவை அடையாளம் காட்ட திருமூலர் கையாண்ட '**ஆவி**' என்ற வார்த்தையை தவறாகப் புரிந்துக் கொள்ளப்பட்டு, ஏதோ வெள்ளையாக வருகின்ற பேய் என்பதுப் போல ஒரு மாய பிம்பத்தை மனதில் ஏற்றி வைத்து, மக்களை தற்குறிகளாகவே மாற்ற முயற்சித்திருக்கின்றனர் என்றும் பார்க்க முடிகின்றது.

ஏனெனில், சினிமாவில் ஆவி என்றால் வெள்ளையாக வருவதுப்போல, எல்லோருக்கும் உண்டான சினிமா மோகம் இன்று வரை, சினிமாவில் சொன்னால்தான் அது சரியாக இருக்கும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஆனால், நமது பண்டைய ரிஷிகள் உயிரின் சூக்குமான வடிவத்தை சுட்டிக் காட்டும் வகையில், அது நம் சாதாரண கண்களுக்குப் புலப்படாது என்பதை எப்படியாவது எளிய பாமர மக்களுக்குப் புரிய வைக்க முயன்றிருக்கின்றார்கள்.

அந்த வகையிலே, நமது நடைமுறையில் இருக்கின்ற ஒரு பிரமாண்டமான ஆலமரத்தின் பழத்தை இரண்டாகப் பிழந்து, அதை நன்றாக உறித்து, அதனுள்ளே உள்ள விதைகள் கடுகு அளவுக்கு இருப்பதைப் பார்த்து, அதில் ஒன்றை மட்டும் எடுத்து, அந்த கடுகு அளவுள்ள விதையை பலவாறாக உடைத்து அதன் உள்ளே பார்க்க முயன்றால், அங்கு ஒன்றுமே இருக்காது. அப்படி அந்த விதையிலே ஒன்றுமே பார்க்க முடியாது.

அதாவது, மிகவும் நுண்ணிய நிலையிலே, உயிர் அந்த விதையில் ஒளிந்துக் கொண்டு இருப்பதினால்தான், அந்த சிறிய விதை மிக பிரமாண்ட ஆலமரமாக மாற முடிகின்றது. ஆக, அந்த ஒன்றுமற்ற நிலையிலேதான் **உயிர்** உள்ளது.

இதிலே, சைவ சிந்தாந்தம் **84 இலட்சம்** யோனி பேதங்களில் உயிரினங்கள் இந்த உலகத்தில் தோன்றியுள்ளன என்கின்றது.

ஆனால், அறிவியலோ, வெறும் கண்களுக்குப் புலப்படாத அணுவை முன்னிறுத்தியும், உடலின் உயிரியல் செல்களை முன்னிருத்தியும் அவைகளைத் தான் **உயிர்** அல்லது **உயிரினம்** என்கின்றது.

உதாரணமாக, ஒரு செல் உயிரி **அமீபா** மற்றும் பல செல்கள் உயிரி **மனிதன்** என்கின்றது அறிவியல்.

அறிவியல் அறிஞர்களின் கூற்றுப்படி, கோடானுகோடி ஆண்டுகளுக்கு முன்பு, அலை ஏற்றத்தால் நிரம்பி வழிந்த பழங்கால குளத்தின் ஓரத்தில், அல்லது கடலின் ஆழத்தில், உயிர் தோன்றியதென பரிணாமத்தை நம்புகிற பலர் கூறுகிறார்கள்.

இதுப்போன்ற ஓர் இடத்தில், நீர்க்குமிழிகள் வடிவில் ரசாயனங்கள் தானாகவே ஒன்றிணைந்து சிக்கலான மூலக்கூறுகளை உண்டாக்கின, பின்பு அவைகள் பன்மடங்கில் பெருகின என்று அவர்கள் நினைக்கிறார்கள். இந்தச் **"சாதாரண"** மூல செல்களிலிருந்தே (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செல்களிலிருந்தே) பூமியிலுள்ள அனைத்து உயிரினங்களும் தற்செயலாய்த் தோன்றியதாக அவர்கள் நம்புகிறார்கள்.

ஆனால், பரிணாமத்தை நம்புகிற வேறுசில பிரபல அறிவியல் அறிஞர்களோ இதை ஒத்துக்கொள்வதில்லை. முதல் செல்களோ அவற்றின் முக்கிய கூட்டுப்பொருட்களோ விண் வெளியிலிருந்து பூமிக்கு வந்திருக்கலாம் என அவர்கள் ஊகிக்கிறார்கள்.

ஆனாலும், இவர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் உயிரற்ற மூலக்கூறுகளிலிருந்து உயிர் தற்செயலாய் உருவாக முடியும் என்பதை இவர்களால் நிரூபிக்க முடியவில்லை.

நமது சனாதன தர்மத்தின்படி, உயிர்கள் அனைத்தும் ஒரே ஆன்மா என்ற ஒரு நிலையான தத்துவத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

ஆன்மா என்பது ஒரு தனித்துவமான, அழியாத ஒரு சக்தி. ஒவ்வொரு உயிரினத்திலும் அது தங்கியிருக்கிறது. ஆகவே, அத்தகைய உயிரினங்களுக்கு வருகின்ற மரணம் என்பது, அவைகளின் உடலுக்குத்தானே தவிர, உண்மையில் ஆன்மாவுக்கு அல்ல என்பது நமது சனாதன தர்ம கோட்பாடு ஆகும்.

சனாதன தர்மம் ஆன்மாவை நித்தியமானது மற்றும் அழிக்க முடியாதது என்று பார்க்கிறது. ஒருவர் ஆடைகளை கழற்றி மாற்றுவதுப் போல, இந்த உடல்களை மட்டுமே உயிர் மாற்றுகிறது. ஆகவே, ஆயுதங்கள் அதை வெட்டுவதில்லை, நெருப்பு அதை எரிப்பதில்லை, தண்ணீர் அதை நனைக்காது, காற்று அதை உலர்த்து வதில்லை என்கின்றது சாஸ்திரம்.

மரணம் என்பது உயிரின் பயணத்தின் இயல்பான பகுதியாகக் கருதப்படுகிறது. இந்த உயிரின் விடுதலை நிமித்தம் உடல்கள் உண்டாக்கப்பட்டு, இறுதியில், அறிவுப் பரிணாமத்தில் வந்த மனித உடலிலுள்ள ஆறாம் அறிவாகிய பகுத்தறின் மூலம் உயிருக்கு விடுதலை (மோட்சம்) உண்டாகும் வரை, உடல் தேவைப்படுகின்றது என்று பார்க்கப்படுகின்றது.

ஆன்மா என்பது ஒரு நபரின் அழியாத சாராம்சம் என்று விவரிக்கப்படுகிறது. ஆன்மா அழியாதது மற்றும் நித்தியமானது என்பதினால், அது அழியக்கூடிய உடல் போல இல்லாமல், ஆன்மா எப்போதும் மாறாமல் உள்ளது. மற்றும் யாராலும், எதனாலும் அழிக்க முடியாது.

ஆக, இங்கு படைப்பு என்பதே "**பரமான்மா**" எனும் பரமனின் இருப்பினாலேயே இருக்கின்றது.

இறைவன் தான் எல்லாவற்றையும் படைத்தான் என்று எல்லா மதங்களும் ஏற்றுக் கொள்கின்றன. இதில் யாருக்கும் முரண்பட்ட கருத்து இருக்க முடியாது என்றாலும், இறைவனை ஏற்றுக் கொள்வதில் மட்டும்தான் பலருக்கும் பலவிதமான கருத்து முரண்பாடுகள் உள்ளன.

அந்த வகையிலே, உருவம், அருவம், அருவுருவம் என மூன்று நிலைகளில் உள்ள இறைவனை இந்து மதம் சிவம் என்கின்றது. இஸ்லாமிய மதம் அல்லா என்கின்றது, கிருஸ்துவ மதம் ஜெகோவா என்கின்றது.

ஆக, அவரவர்கள் உருவாக்கிக் கொண்ட உருவம் மற்றும் அருவம் அல்லது அருவுருவம் என்ற அடிப்படையில் இறைவனுக்காக இவர்கள் சண்டையிட்டுக் கொள்கின்றனர்.

ஆனால், உண்மையில் இறைவன் எப்படி இருக்கின்றான்? என்பதை நமது சனாதன தர்மத்தின் வழியில் வந்த பண்டைய ரிஷிகள், இந்து, இஸ்லாம் மற்றும் கிருஸ்துவ மதம் தோன்றுவதற்கு முன்பாகவே வெளிப்படையாக வேதத்தின் வாயிலாக, வெட்டவெளிச்சமாக காட்டிக் கொடுத்து விட்டார்கள்.

எப்படிக் காட்டிக் கொடுத்தார்கள்?

படைப்பு படைக்கப்படுவதற்கு முன்பாக என்ன இருந்ததோ? அதுவே, படைப்பை உண்டாக்கி இருக்க முடியும். அப்படி எது உண்மையில் இருக்கின்றது என்று பார்த்தால், அதுவே வெட்டவெளி.

ஆம்!

அந்த வெட்டவெளி மட்டுமே உண்மையில் இருக்கின்றது. அதுவே, இருப்பு, அதுவே இறைவன், சிவம், அறிவு, ஆன்மா, உயிர், ஒளி என பலவகைகளில் அழைக்கப்படும் அதை, உருமற்றதை மற்ற மதங்களும் அல்லா, ஜெகோவா என அழைக்கின்றது.

இதைத்தான் நமது மகான்கள் **நிர்குண ப்ரஹ்மம்** என்கின்றனர். நிர்குண ஸ்வரூபம் என்றால், அதற்கு உருவமும் இல்லை. குணங்களும் இல்லை.

அப்படிப்பட்ட அதனிடமிருந்து வெளிப்பட்ட ஆற்றலைக் கொண்டே அது இந்த பிரபஞ்சத்தை உருவாக்கியது. அதைத்தான் நமது சனாதன தர்மம் சற்குண ப்ரஹ்மம் என்கின்றது. சற்குண ஸ்வரூபம் என்றால், அதற்கு உருவமும், பெயரும் உண்டு.

இவ்வாறு உண்டான இறைவனின் மகத்தான சக்தியையே இந்த பிரபஞ்சமாகப் பார்க்கின்றோம். இதன் ஆற்றல் மாறிக் கொண்டே இருக்கின்றது. இந்த ஆற்றலில் ஒருப் பகுதிதான் "உயிர்" எனப்படுகின்றது. இதைத்தான் ஆன்மா என்றும் அழைக்கப்படுகின்றது.

देही नित्यमवध्योऽयं देहे सर्वस्य भारत।

तस्मात्सर्वाणि भूतानि न त्वं शोचितुमर्हसि॥३०॥

தேஹீ நித்ய மவத்யோ(அ)யம் தேஹே ஸர்வஸ்ய பாரத|

தஸ்மாத் ஸர்வாணி பூதாநி ந த்வம் ஸோசிது மர்ஹஸி ||2–30||

ஒவ்வொரு உடலிலும் உள்ள அதை யாராலும் கொல்ல முடியாது . எனவே, நீ எந்த உயிரைப் பற்றியும் கவலை கொள்வது தகாது. அந்த உயிரை யாராலும் அழிக்க முடியாது என்பதாக இங்கு அர்ஜுனனுக்கு உபதேசிப்பதாகப் பார்க்கின்றோம்.

அப்படியானால், இங்கு அழிவு என்பது எதற்கு உண்டாகின்றது? என்றால், இந்த உடலுக்குத்தான் அழிவு உண்டாகின்றது.

உதாரணமாக, நமது சிறு வயது புகைப் படத்தைப் பார்த்தால், நாமா அது என்று ஆச்சரியப்படுவோம். அப்படி ஆச்சரியம் வரவில்லை என்றால், இன்னும் கொஞ்சம் முன்னோக்கி சென்று பாருங்கள்.

இரண்டு வயது, ஒரு வயது, ஆறு மாத குழந்தை உருவத்தையும் பாருங்கள். உங்களது புகைப்படங்களில் அல்லது வீடியோக்களில் பாருங்கள்.

இப்போதுள்ள உருவத்தையும் பாருங்கள். ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா?

எங்கே அந்த குழந்தை? எங்கே போய் விட்டது ?

கண், காது, மூக்கு, முடி, பல் என்று எல்லாமே மாறிப் போய் விட்டதே.

அதற்கும் இப்போதுள்ள உங்களுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை.

அந்த உருவம் இறந்து போய் விட்டது தானே ?

சரி, அப்போது இருந்த மன நிலை இப்போது இருக்கிறதா ?

ஒரு வயதில், இரண்டு வயதில், ஐந்து வயதில், பத்து வயதில் இருந்த மனம் இப்போது இருக்கிறதா ?

உடலும் அது மாதிரி இல்லை. மனமும் அது மாதிரி இல்லை.

அப்படி என்றால் இப்போது உள்ளது எங்கிருந்து வந்தது? ஏதாவது ஒரு தொடர்பு இருக்க வேண்டும் அல்லவா?

உடல் மாறிக் கொண்டே இருக்கிறது. மனம் மாறிக் கொண்டே இருக்கிறது.

பழையன இறந்து புதியன பிறந்து கொண்டே இருக்கிறது.

இருந்தும் நான் என்ற அந்த ஒன்று தொடர்ந்து கொண்டே இருக்கிறது அல்லவா?

பத்து வயதில் உள்ள நானுக்கும், ஐம்பது வயதில் உள்ள நானுக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்றாலும், இரண்டும் ஒரே ஆள் தான் என்று நினைக்கிறோம்.

இதிலே, இந்த நான் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், மாறிக் கொண்டிருப்பது உடலும், மனமும் மட்டுமே.

அதாவது, அந்த பழைய உடம்பு காணாமலே போய் விட்டது.

இப்போது தேடினாலும் கிடைக்காது.

இருப்பினும் "நான்" என்பது இந்த உடம்புதான் என்று நாம் நினைக்கிறோம்.

எந்த உடம்பு ?

பத்து வயது உடம்பா ?

இப்போது உள்ள உடம்பா ?

அல்லது, நாளை வரப்போகின்ற உடம்பா?

இங்கு என்ன கூறவருகின்றேன் என்றால், இறப்பு என்பது ஒவ்வொரு நொடியும் உங்களுக்குள் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. உங்கள் உடலில் உள்ள செல்கள் மாறிக் கொண்டே இருக்கின்றன. அதனால், உங்கள் உடல் மாறிக் கொண்டே இருக்கிறது.

அது கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டே இருக்கிறது. கொஞ்சம் இறந்து, கொஞ்சம் பிறந்து என்று ஒவ்வொரு நாளும் இந்த இறப்பும், பிறப்பும் உங்களுக்குள் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

அதற்காக நீங்கள் யாராவது வருத்தப்படுகிறீர்களா ?

ஐயோ என் அறிவு வளர்ந்து விட்டதே என்று யாராவது வருந்துவார்களா ?

ஐயோ என் உடல் வளர்ந்து விட்டதே என்று வருத்தம் வருமா ?

மாற்றம் ஒவ்வொரு நொடியும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

கீதையில் இந்த இடத்தில், இறப்பைக் கண்டு நீ வருத்தம் கொள்ளாதே! என்கிறார் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர். உண்மையில் நீ இந்த உடல் கிடையாது. நீயோ இந்த உடலில் உள்ள ஆன்மாவின் அதிசய சக்தியான உயிர். ஆகவே, அதை யாராலும் கொல்ல முடியாது. எனவே, நீ எந்த உயிரைப் பற்றியும் கவலை கொள்வது தகாது என்கின்றார்.

ஆக, இந்த மேலோட்டமான (உடல் மற்றும் மனம்) இறப்பிற்கு பின்னால் தொடரும் **"நான்"** என்ற அந்த இருப்பு எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது.

ஆகவே, இந்த உலகில் நடக்கும் மாற்றத்தை அனுமதி.

பழைய சிந்தனைகள் மறையட்டும். புது சிந்தனைகள் பிறக்கட்டும்.

பழைய செல்கள் போகட்டும். புது செல்கள் உருவாகட்டும்.

இது புரிந்தால், மரணம் பற்றிய பயம் போகும்.

மாற்றம் என்பது நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

நம் துக்கம் எல்லாம், இந்த மாற்றத்தைக் கண்டு மனம் பதறும் போதுதான் வருகின்றது.

மாற்றத்தை ஏற்க மனம் மறுக்கும்போதுதான் வருகின்றது.

நமக்கு மிகவும் நெருக்கமான ஒருவர் இறந்து போகிறார் என்றால், நமக்கு துக்கம் வருகிறது.

ஏன் ?

அந்த மாற்றத்தை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மாற்றம் இல்லாமல் அப்படியே இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம்.

அது முடியுமா ?

அதற்காக வருந்துவது சரி தானா ? சரி இல்லை!

ஆம்! இங்கு உண்மையில் உயிர் (ஆன்மா) இறப்பது இல்லை. இறப்பெல்லாம் உடலுக்கு மட்டுமே.

உறங்கு வதுபோலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. – திருக்குறள்.

இதே பகவத் கீதையில் வரும் "**அனைத்து உயிரினங்களிலும் நான் தான்**" என்பதன் அர்த்தம் என்ன?

நமக்குப் **பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல், உணர்தல்** என 5 புலன் சார்ந்த உணர்வுகள் உள்ளன. இந்த 5 உணர்வுகளைத் தவிர, விழித்திருக்கும் காலம் முழுவதும் நினைவிலிருந்து எண்ணங்கள் இடைவிடாமல் வெளிப்படுகின்றன.

ஐந்து உணர்வுகளும், மனதின் சிந்தனை, அதற்கான செயல்முறை என எல்லாமே சேர்ந்து புலனுணர்வுகள் என்று அழைக்கப்படுகிறது.

தொல்காப்பியம், மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களையும் ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்துகிறது. ஆறறிவு என்பது மெய், நாக்கு, மூக்கு, கண், செவி ஆகிய ஐந்து புலன்களுடன், மனம், சிந்தனை, பகுத்தரிதல் ஆகியவற்றை உள்ளடக்கிய அறிவுத்திறனாகும்.

**ஓரறிவு:**

மெய்யால் (உடம்பால்) மட்டும் உணரும் உயிர்கள் (உதாரணமாக, செடி, தாவரம்).

**ஈரறிவு:**

மெய், நாக்கு ஆகிய இரண்டு புலன்களால் உணரும் உயிர்கள் (உதாரணமாக, நத்தை, சங்கு).

**மூவறிவு:**

மெய், நாக்கு, மூக்கு ஆகிய மூன்று புலன்களால் உணரும் உயிர்கள் (உதாரணமாக, எறும்பு, ஈசல்).

**நான்கறிவு:**

மெய், நாக்கு, மூக்கு, கண் ஆகிய நான்கு புலன்களால் உணரும் உயிர்கள் (உதாரணமாக, நண்டு, தும்பி).

**ஐந்தறிவு:**

மெய், நாக்கு, மூக்கு, கண், செவி ஆகிய ஐந்து புலன்களால் உணரும் உயிர்கள் (உதாரணமாக, ஆடு, மாடு).

**ஆறறிவு:**

மெய், நாக்கு, மூக்கு, கண், செவி ஆகிய ஐந்து புலன்களுடன், மனம், சிந்தனை, பகுத்தரிதல் ஆகிய அறிவுகளால் உணரும் உயிர்கள் (உதாரணமாக, மனிதன்).

இந்த உணர்வுகள் அனைத்தும் யாருடைய பங்கிலும், எந்த முயற்சியும் அல்லது வேண்டுமென்றே தேர்ந்தெடுக்கப்படாமலேயே தன்னிச்சையாக நிகழ்கின்றன.

இந்தப் புலனுணர்வுகளுக்குப் பின்னால், தனியாக நின்று, புலனுணர்வு களிலிருந்து முற்றிலும் பிரிந்து நிற்கும் ஒரு உணர்வாளரை நீங்கள் தேடினால், நீங்கள் யாரையும் கண்டுபிடிக்க முடியாது.

எனவே, இந்த மாய உணர்வாளரையும், உணரப்பட்டவரையும் பிரிக்கும் எந்த சுவரையும் நீங்கள் காண முடியாது!

இது நமக்கு என்ன சொல்கிறது?

உணரும் கொள்கை என்பது, தனக்கான எந்த வரம்பு எல்லைகளையோ அல்லது இருப்பிடத்தையோ? அங்கீகரிக்காத, இதே புலன்கள் மற்றும் மனதிற்கு தோன்றாத ஒரு தன்னிச்சையான அனைத்தையும் அறியும் அறிவு ஒளியாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதை இது மிகத் தெளிவாகக் கூறுகிறது.

நமது எந்தவொரு புலனுணர்வுகளிலும், எந்தவொரு பொருள் மற்றும் பொருள் பிரிவையும் அது அங்கீகரிக்கவில்லை. ஆனால், அது ஒரு தடையற்ற ஹாலோகிராம் போன்ற புலனுணர்வுத் துறையை உள்ளடக்கியது.

தர்க்கரீதியான மற்றும் நியாயமான நீட்டிப்பின் மூலம் இந்த அறிவு ஒளி முழு படைப்பையும் ஒரு பிரிக்கப்படாத முழு **ஹாலோகிராமாக** உள்ளடக்கியது.

இந்த ஒளியை நாம் பொது மொழியில் "**உணர்வு**" என்கின்றோம்.

அதாவது, "**பிரஞ்ஞை**" என்கின்றோம்.

இந்த அறிவு ஒளிதான், "**நான் எல்லா உயிர்களிலும் உள்ள சுயம்**" என்று கூறுகிறது.

எனவே, "**நான் எல்லா உயிரினங்களிலும் உள்ள சுயம்**" என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறும்போது, நாம் அனைவரும் அறிந்து வைத்துள்ள இந்த ஸ்ரீகிருஷ்ணர் என்று அறியும் வடிவத்தைப் பற்றிப் பேசவில்லை. மாறாக அவர் இந்த ஒட்டுமொத்த பிரபஞ்சம் தழுவிய மற்றும் அருவமான அறிவு ஒளியைப் பற்றிப் பேசுகிறார்.

அதுவே இருப்பு, அதுவே ஆன்மா, அதுவே உயிர்.

கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பொருள்களும் ஒன்றே. அதுவே, இறைவன், கடவுள், என்பதினால், இங்கு இருப்பதெல்லாம் இறைவனே என்ற கோட்பாட்டில் உள்ளது.

அந்த வகையிலே, நான் இந்த உடல் என்பதாகவும், இதனுள் உயிர் எனத் தனியே ஒன்று இருப்பதாகவே பெரும்பாலான மக்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

பிணத்தால் சிறிதும் இயங்க முடியவில்லை; எனவே, பிணமாகிய உடலுக்குள் இருந்த ஏதோ ஒரு பொருள் உடலினின்றும் வெளியேறிவிட்டது; அதனால்தான் உடலால் இயங்க முடியவில்லை; வெளியேறிய பொருள்தான் உயிர் எனப் பலரும் நம்பிக் கொண்டுள்ளனர்.

காட்சியளவில் (பிரத்தியட்சப் பிரமாணமாக) உயிரைத் தனியே பிரித்துக் கண்ணால் காண முடியாவிடினும், இயங்கும் உடல், இயங்காத பிணம் என்னும் இரண்டையும் காட்சியில் கொண்டு, இயங்கும் உடலில் உயிர் என ஒன்று இருக்கவேண்டும்–இயங்காத பிணத்தினின்றும் அவ்வுயிர் வெளியேறிவிட்டிருக்க வேண்டும்–எனவே, உயிர் என்னும் ஒரு பொருள் இருப்பது உறுதி என அனுமானமாக முடிவு எடுத்துள்ளனர்.

ஆனால், இது மிகவும் நுட்பமாகச் சிந்திக்கவேண்டியுள்ளது.

உயிர் என்னும் ஒன்று வெளியேறி விட்டதனால் உடல் இயங்காமல் பிணம் எனப்பட்டதா? அல்லது, உடல் இயங்க ஒத்துழைக்காமையால், உயிர் என்னும் ஒன்று வெளியேறிவிட்டதா? இதற்குச் சரியான விடை வேண்டும்.

எனவே, இது சிந்தனைக்கு உரியதாகும்.

இதற்கு, உயிர் போய்விட்டதனால், உடல் இயங்கவில்லை–பிணமாய் விட்டது' என்று கூறுவது பொருந்தாது. உடல் இயங்க முடியாமல் போனதால்தான், உயிர் வெளியேறி விட்டதாகக் கருதுவது மட்டுமே சரியாக இருக்கும்.

உடல் உடலுறுப்புகள் சரியான நிலையில் இருப்பவர் நீண்ட காலம் வாழ்கிறார். உடல் உறுப்புகள் நோயினாலோ அல்லது வேறு ஏதாவது வகையில் விபத்து போன்ற காரணங்களாலோ உடல் கெட்டுப் போனவர் செத்துப் போகிறார்.

நூறு ஆண்டுகளும் அதற்கு மேலும் வாழ்பவர்கள், உடல் உறுப்புகள் தேய்ந்து போவதால்–மிகப் பழமையாகி ஆற்றல் இழந்து போவதால் உடல் இயங்க முடியாமல் செத்துப் போகிறார்கள்; இதிலிருந்து தெரிவதாவது உடல் இயக்கத்தைக் கொண்டு உயிர் உள்ளதே தவிர, உயிர் இயக்கத்தைக் கொண்டு உடல் இல்லை என்பதாகும்.

அந்தக் காலத்தில் மனிதர்கள் அவ்வளவு சீக்கிரமாக இறக்க மாட்டார்கள். அவர்கள் வயது முதிர்ந்து, ஒன்றும் செய்ய முடியாமல், உடல் ஒத்துழைக்காமல் போனால் கூட, உயிரை விட மாட்டார்கள்.

இறப்பு நேராமல் வயோதிக மிகுதியினால் முடங்கிப்போனவர்களை அடக்கம் செய்வதற்கு மண் பாண்டத்தைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்தது. இறந்தவர்களின் உடலை ஒரு பெரிய பானைக்குள் வைத்து, மண்ணுக்குள் அடக்கம் செய்தார்கள். இந்த வழக்கமே ' முதுமக்கள் தாழி' என சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டது.

ஐவர்க்கு ஒருசெய் விளைந்து கிடந்தது;
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்;
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்,
ஐவரும் அச்செய்யைக் காவல் விட்டாரே. – (திருமந்திரம், 188)

உடையவன் ஒருவன், தன்னுடைய நிலம் ஒன்றை, ஐவருக்குக் குத்தகை உரிமையாக வழங்கினான். ஐவரும் தங்கள் திறனால் அதை நன்றாகப் பேணி வந்தார்கள். நிலமும் பொன்னாக விளைந்து கொடுத்தது. ஒருகட்டத்தில் நிலத்துக்கு உடையவன் குத்தகையை மாற்றக் கருதி அவர்கள் ஐவரையும் நிலப் பொறுப்பிலிருந்து விலகுமாறு ஓலை விட்டான். ஐவரும் அந்த நிலத்தைக் கைவிட்டு விலகினார்கள்.

இங்கே ஐவர் என்றது ஐம்புலன்களை குறிக்கின்றது. நிலம் என்றது உயிரை குறிக்கின்றது. விளைதல் என்பது, அறிந்தும் உணர்ந்தும் உயிர் தன்னை மெருகேற்றிக் கொள்ளும் தொழிற்பாட்டை. நாயகன் என்ற இறைவனை குறிக்கின்றது. ஓலை என்றது சாவின் அழைப்பை குறிக்கின்றது. காவல் விடுதல் என்றது சாவை குறிக்கின்றது.

உயிர் ஓர் அறிவுப் பொருள்.

மேசை, நாற்காலிப்போல எதையும் அறிய முடியாத சடமாக இல்லாமல், எல்லாவற்றையும் அறிகின்ற இயல்புடையது.

ஆனால், எதையும் அது தானாக அறியாது.

அறிவிக்க அறியும். அழுந்தி அறியும். அதாவது, எதையும் தோய்ந்து அனுபவித்தே அறியும். உயிரை, உலகப் பொருள்களில் தோயச் செய்து, அதற்கு உண்மை பொய்ம்மைகளை அறிவிப்பதற்குப் புலன்கள் தேவை.

புலன்கள் இல்லாமல் உயிரின் அறிவு நிகழ்வதில்லை.

உழுநிலத்துக்கு உழுவான் தேவை என்பதைப் போல; உழுகிறவன் கைவிட்ட நிலம் கரம்பையாய்ப் போவதைப் போல.

பொறி இன்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவுஎன்ற பெயர்நன்று அற. - (திருவருட்பயன், 15)

உமாபதி சிவம் எழுதிய சித்தாந்த சாஸ்திர நூல்களில் ஒன்றான **திருவருட்பயன்** உயிரின் நிலையை இவ்வாறு சொல்கிறது.

உயிரின் இயல்பு அறிவதுதான் என்கிறீர்கள். உயிருக்குப் பெயரே அறிவுதான் (சித்து) என்கிறீர்கள். ஐந்து பொறிகளின் துணை இல்லாமல் எந்த ஒன்றையும் அறிய முடியாமல் தடுமாறுகிற உயிருக்கு அறிவு என்ற பெயரா? நன்றாகத்தான் இருக்கிறது என்கின்றார் உபாமதி சிவம்.

எனவே, உயிர் அறிய வேண்டுமானால், அறிவிப்பதற்குப் புலன்கள் வேண்டும்.

புலன்கள் எல்லாவற்றையுமே அறிவிக்குமா?

உலகியலுக்கு அப்பால் உள்ள பாதாள, பரலோகங்களை அறிவிக்குமா? என்றால், வாய்ப்பில்லை. அவைகள் கருத்தால் மட்டுமே சென்றடையக்கூடிய இடங்கள். புலன்களால் அவற்றுக்கு வழிநடத்த முடியாது. ஆனால், உலகியலுக்கு அப்பால் ஏதேனும் இருக்கின்றனவா? என்ற கருத்துலக ஆய்வுக்குள் நுழைய வேண்டுமானால், முதலில் பருவுலகில் இருப்பவற்றை அறிய வேண்டாமா?

அதாவது புலன்களைப் பயன்படுத்தாமல், வெறும் சிந்தனையின் வழியாகவே நாம் சிலவற்றை அறிய முடியும்.

அதற்கு எடுத்துக்காட்டாகக் கணக்கியலைப் பார்க்கலாம்.

நாம் எப்படிக் கணக்கிடுகிறோம்?

என்னிடம் இரண்டு மாம்பழங்கள் இருக்கின்றன; நண்பர் மூன்று மாம்பழங்கள் கொண்டு வந்தார். எடுத்துவைத்து எண்ணினால், என்னிடம் கையில் இருப்பவை மொத்தம் ஐந்து. ஐந்துமே புலன்களால் கண்டவை. இது எளிய கணக்கிடும் முறை.

<u>இதைக் கொஞ்சம் மாற்றிக் கருதிப் பார்க்கலாம்:</u>

என்னிடம் இரண்டு மாம்பழங்கள் இருக்கின்றன; இன்னும் மூன்று மாம்பழங்களைச் சேர்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அவற்றையும் சேர்த்தால் என்னிடம் இருக்கக்கூடிய மாம்பழங்கள் மொத்தம் ஐந்து.

இந்த முறை, கையில் இருப்பவை இரண்டு. கருத்தில் இருப்பவை மூன்று.

அதாவது புலன்களால் கண்டவை இரண்டு. காணாதவை மூன்று.

<u>இன்னும் கொஞ்சம் மாற்றிக் கருதிப் பார்க்கலாம்:</u>

என்னிடம் எதுவுமே இல்லை. உடன் பணியாற்றுகிறவர்களில் ஒருவர், மாம்பழம் வாங்கினேன். நாளை வரும்போது இரண்டு கொண்டு வருகிறேன் என்கிறார்.

மற்றொருவர், நானும் வாங்கினேன். மூன்று கொண்டு வருகிறேன் என்கிறார்.

இரண்டும் மூன்றும் ஐந்து என்று கணக்கிடுகிறேன் நான்.

இந்த முறை, கையில் எதுவுமே இல்லை. ஐந்தும் கருத்தில். அதாவது, புலன்களால் கண்டவை ஒன்றுமில்லை. காணாதவை ஐந்து.

எனவே, கணக்கியலுக்குப் புலன்களால் காண வேண்டும் என்ற அவசியமில்லை.

கணக்கியல் புலன் சார்பற்றது என்று சொல்லப்படுகிறது.

இரண்டும் மூன்றும் ஐந்து என்று கண்களால் பார்க்காமல் கருத்தாலேயே கணக்கிட்டீர்கள்.

சரி.

ஆனால் இரண்டையும் மூன்றையும் எப்படி அறிந்தீர்கள்?

இரண்டு மாம்பழம், மூன்று நெல்லிக் காய்கள் என்று கண்டும் கையால் தொட்டு எடுத்து வைத்து எண்ணியும்தானே அறிந்தீர்கள்?

புலன்களால் அறியப்படக்கூடிய எதுவுமே இல்லாமல், இது ஒன்று, இவை இரண்டு, மூன்று என்று எப்படி எண்ணுவீர்கள்?

முதன்முதலில், எண்ணி அறிந்த பிறகு அவைகள் கருத்துருவம் ஆகிவிட்ட எண்கள் என்பது சரி; ஆனால், எண்ணிக் கருத்துருவம் ஆகும்வரை அவை பருண்மையான பொருட்கள்தாமே? பொருட்களே இல்லாமல் எண்கள் எப்படி உங்கள் மண்டைக்குள் வந்தன?

பொருட்களே இல்லாமல் நம்முடைய எண்ணத்துக்குள் எண்கள் வரலாம் என்றால், எதுவும் வரலாந்தானே?

பிறகு ஏன் நாம் பார்க்க வேண்டும்? கேட்க வேண்டும்? சுவைக்க வேண்டும்?

எல்லாம் மனக்கணக்கு தான்.

எண்ணிப் பார்த்தால், கருத்துருவங்களை உருவாக்குவதும் காட்சி உருவங்களே அல்லவா?

கருத்துருவமான கடவுளுக்கு நாம் வடிவம் கொடுத்ததுங்கூடக் காட்சி உருவங்களைப் பார்த்தே அல்லவா?

மகனுக்குப் பெண் பார்த்துவிட்டு வந்து, மருமகள் மகாலட்சுமியைப்போல் இருக்கிறாள் என்னும் தாய்மார்களில் எவர் மகாலட்சுமியைப் பார்த்திருக்கிறார்கள்?

மண்ணில் கண்டவளின் வடிவந்தான் விண்ணில் வாழ்பவளுக்கும் என்றொரு மனக்கணக்குதான்.

ஆக, ஐந்து புலன்கள் உருவாக்கித் தரும் அடிப்படை இல்லாமல் அறிவு இயல்வதில்லை; புலன்களோ உடம்பின் வழியில் வருபவைகள்.

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே. – திருமந்திரம்.

எனவே, அறிவைப் பெறுவதற்கு ஆதாரமாக இருப்பது உடம்பு.

உயிர் என்றால் என்ன?

நம் கண்களுக்குத் தெரியும் நம் பருவுடல் (ஸ்தூல சரீரம் – Physical (Gross) Body) கோடிக்கணக்கான சிற்றறைகளால் (Cells) ஆனது. நம் உடலின் சிற்றறைகள் நுண்ணிய அணுக்களாலானது.

நம் பருவுடலுக்குள் நம் கண்களுக்குப் புலப்படாத வகையில் மறைபொருளாக ஓடிக் கொண்டிருப்பது உயிருடல் (சூக்கும சரீரம் – Astral (Subtle) Body).

நம் உயிருடல் கோடிக்கணக்கான பரமாணுக்களால் (Fundamental Tiny Particles) ஆனது. காரண உடல் (Causal body).

நம் உயிருக்கு அழிவில்லையா?

நம் உயிருக்கு மட்டுமல்ல... அந்த வகையிலே, நம் உடம்புக்கும் அழிவில்லை.

நம் உடலைவிட்டு உயிர் விலகிய பின்பு, நம் உடம்பு கொண்டுள்ள உருவத்திற்கு மட்டுமே அழிவு உண்டு. அதுவும் வேறு ஒரு பரிமாணத்திற்கு உட்படுகின்றது என்றுதான் பார்க்கின்றோம். அதாவது, அந்த உடல் உயிரோடு இருந்த பொழுது, எப்படி பல்வேறு மாற்றங்களை சந்தித்ததோ? அதாவது, பால்யப் பருவம், இளமைப் பருவம், பிறகு முதுமைப் பருவம் என பல்வேறு பரிமாணங்களில் பயணித்ததோ? அப்படியே, அந்த உடல் இறந்த பிறகும் மற்ற உடல்களாக மாறி பயணிக்கின்றது என்றே பார்க்கின்றோம்.

உதாரணமாக, உடலை மண்ணில் புதைத்தால் புழு, பூச்சிகள் உடல் உண்டாகின்றது. எரித்தால், செடி, கொடிகள் என தாவரங்களுக்கு உணவுப் பயிறுக்கு உரமாகின்றது.

இதை எப்படி நடைமுறை உண்மையோடு பொருத்திப் பார்க்கலாம் என்றால், ஒரு நிறுவனத்தில் பொருளாதார நஷ்டம் ஏற்பட்டு, அந்நிறுவனம் செயல்படாது முடங்கிப் போனால் அந்த நிறுவனத்தில் பணிபுரிந்த அனைத்துத் தொழிலாளர்களும் அந்த நிறுவனத்தை விட்டு இடம்பெயர்ந்து, அவரவர்களுக்கேற்றவாறு வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டுத் தத்தமது வாழ்வைச் செம்மையாக நடத்திவருவது போல, பஞ்சபூதங்களாலான நம் உயிர்+ உடலில் ( நிலம் – நம் பருவுடல், நீர் – நம் இரத்தம் நெருப்பு – நம் உடல் வெப்பம் காற்று – நம மூச்சுக் காற்று, ஆகாயம் அல்லது விண் – நம் உயிர்) நுண்ணிய அணுக்களாக ஒன்றிணைந்து இயங்கும்.

இவ்வைந்தும் பிணைப்பு விடுத்து விலகி, தனித்தனியாக நுண்ணிய அணு அளவில் இயங்கத் தொடங்குமேயன்றி அழியாத ஆனால், நம் உடல் கொண்ட நம் உருவம் மட்டும் அந்நிறுவனம் போல கலைந்துபோகும்.

<u>சிவவாக்கியர் – சித்தர் பாடல்:</u>

"கறந்தபால் முலைப்புகா கடைந்தவெண்ணை மோர்புகா
உடைந்துபோன சங்கினோசை உயிர்களும் உடற்புகா
விரிந்த பூஉதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை இல்லையில்லை இல்லையே."

நம் உயிர் உண்மையில் எந்த வகையிலும் உடல் எடுப்பதில்லை. அது எங்கும், எதிலும், எப்போதும் வியாபித்துள்ளது.

அப்படியானால் உடல் எடுப்பது எது?

அதுவே, நமது மனம். ஆம்! அதுவே, சித்தம் என்ற சேமிப்புக் கலனின் அடிப்படையில், ஏற்கனவே சேகரித்து வைத்தை சித்தப்பதிவுகளுக்கு ஏற்றவாறு, வாசனைகளாக, நம்முடைய சம்ஸ்காரங்களாக் கொண்டு வருகின்றது.

அதுவே, சஞ்சித கர்மா, அதுவே காரண தேகம் (causal body), ஆனந்தமய கோஷம் என்கின்றோம்.

அதாவது, ஸ்தூல உடல், பிராண உடல், மனோஉடல், புத்தி உடல், ஆனந்த உடல் என்று ஐந்து உடல்களை சாஸ்திரம் பேசுகின்றது.

ஆனால், நமது எண்ணங்களால் எழுந்த மனம் என்ற நம்முடைய ஆசா, பாசங்கள் மட்டுமே ஒவ்வொரு பிறப்பிலும், ஒவ்வொரு உடலை எடுக்கிறதா? அவ்வாறு நம் மனம் ஒவ்வொரு பிறப்பிலும், ஒவ்வொரு உடலை எடுக்கிறது என்றால், அவ்வுடம்பு முந்தைய உடம்பிலிருந்து எவ்வகையில் வேறுபடுகிறது?

அதாவது, நம்முடைய மனப் பதிவுகள் பல்வேறு எண்ணங்களாக, ஆசைகளாக நடைமுறையில் இருந்துக் கொண்டிருக்கும் போது, இந்த பௌதீகப் பரு உடல் அழிந்து போக நேரிட்டால், இந்த பரு உடல் உருவாவதற்கு ஆதாரமான சூக்கும உடலாகிய மனம் மட்டும், தனது ஆசைகளை சேகரித்து வைத்துள்ள 'சஞ்சித கர்மா' என்ற ஈஸ்வர சித்தத்தின் மூலம், மீண்டும் காரண உடல் என்ற நிலையிலிருந்து மனதின் அடிப்படையில் உடல் எடுத்து வந்து, அந்த மனதின் விடுபட்ட ஆசைகளை அனுபவிக்கத் தொடங்கும்.

இதைத்தான் நமது மாணிக்கவாசகப் பெருமான் பாடுகின்றார்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" – திருவாசகம்.

இவ்வாறு பல்வேறு பிறவிகளுக்குக் காரணமாக இருந்த இந்த உடல்களில், மிக உயரிய பரிணாம வளர்ச்சி அடைந்த உடல் என்ற நிலையில் மனித உடலைப் பார்க்கும் போது, இதை ஊத்தைச் சடலம் என்றும் உப்பிருந்த பாண்டம் என்றும் இகழ வேண்டாம் என்று திருமூலர் பெருமான் கூறுகின்றார்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்;
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்;
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே,
உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே. – (திருமந்திரம்)

உடம்பு இருந்தால்தானே அதில் குடியிருக்கும் உயிர் பற்றிய அறிவைச் சேகரிக்க முடியும்? உடம்பு அழிந்தால், அறிவைச் சேகரிக்கும் பணி பாதியிலேயே நின்றுப் போய் விடாதோ?

ஆகவே, அது முற்றுப் பெற வேண்டாமோ?

ஆகவே உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேன் என்கின்றார்.

உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்;
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்;
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே. – (திருமந்திரம் 725)

சிலர் சொல்வதைப் போல இந்த உடம்பு அழுக்கும், இழுக்கும் என்றுதான் நானும் நினைத்திருந்தேன். ஆனால், அந்த இறைவனே குடியிருக்கும் இந்த உடலைப் பற்றியும், அந்த உடலுக்கு உள்ளேயுள்ள உயிரைப்பற்றியும் அறிவதென்றால்கூட, இந்த உடம்பில்லாமல் எப்படி அறிய முடியும்?

ஆகவே, அரிதான இந்த மனித உடம்பில்லாமல் இறைவனை அறிய முடியாது என்பதினால், இறைவன் இருப்பிடமாகிய இந்த உடம்பையே கோவிலாகக் கருதிக் காக்கின்றேன் என்கின்றார்.

இன்னும் சொல்கின்றார்.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே' – திருமூலர்.

இந்த உள்ளம் என்பது இறைவன் குடியிருக்கின்ற மிகப் பெரிய கோயில்.

கோயில் என்ற வார்த்தையை பிரித்தால், **கோ+இல்** என்று வரும்.

கோ என்றால், பசு என்ற ஒரு அர்த்தமும் உள்ளது. பசு என்றால் சீவன் என்ற அர்த்தமும் உள்ளது. இதைத்தான் சைவ சித்தாந்தம் பசு – பதி – பாசம் என்று பேசும். இல் என்றால் இல்லம் அல்லது வீடு என்றுதான் அர்த்தம்.

ஆக, உள்ளம் இறைவன் இருக்கின்ற பெருங்கோயில். அதற்காகத்தான் அந்த உள்ளத்தை தூய்மையாக வைக்க வேண்டும் என்று மகான்கள் கூறுகின்றார்கள்.

ஆனால், எத்தனைப்பேர்கள் இந்த உள்ளத்தை தூய்மையாக வைத்துக் கொண்டு, இறைவனை நாடுகின்றார்கள்?

இன்று இறைவனை நாடுகின்றவர்கள் யாருக்குமே, உண்மையில் இறைவன் யார்? என்று தெரியவில்லை.

இவர்களைப் பொருத்தவரை இறைவன் என்பவன் இவர்கள் கேட்பதையெல்லாம் கொடுக்கின்ற ஒரு இயந்திரம் போன்றவன் என நினைக்கின்றனர்.

எவ்வாறு, இன்றைய நவீன உலகில் பல டிபார்ட்மெண்ட் ஸ்டோர்களில் உள்ள சில இயந்திரத்துக்குள் சில அத்தியாவசியப் பொருட்களை வைத்துவிடுவார்கள். உதாரணமாக, கூல்ட்ரிங்க்ஸ், சாக்லேட்கள், வெண்ணை, நெய், பால் எனப் பல பொருட்கள் அந்த மெஷின்களுக்குள் இருக்கும். இதிலே, அவரவர்களுக்குத் தேவை யானதை அந்த மெஷின் மூலமாகப் பெறலாம்.

இவர்களைப் பொருத்தவரை அப்படிப்பட்ட ஒரு மெஷின் தான் இறைவன்.

ஆகவே, இறைவனிடம் சென்று '**அது வேண்டும், இது வேண்டும்**' என்றுதான் கேட்பார்களே தவிர, "**இறைவா நீயே எனக்கு வேண்டும்!**" என்று ஒருவரும் கேட்பதில்லை.

இதுவே, இவர்களது அறியாமை என்கின்றது சாஸ்திரம்.

இந்த அறியாமை இருளைப் போக்க பல மகான்கள் முயன்றிருக்கின்றார்கள். அதிலே, பெரும்பாலான மகான்கள் இறைவனை வெளியே தேடி அலைய வேண்டாம். அவன் குடியிருக்கும் ஆலயம்தான் உங்கள் உடம்பு என்கின்றனர்.

அதாவது, இந்த உயிர் உறவாடுகின்ற இடம் ஆலயம் என்கின்றார் திருமூலர். இந்த உடம்பு ஆன்மா இலயப்படுகின்ற இடம். அதனால்தான் இந்த மனித உடலைக் கொண்டு மகத்தான அந்த அறிவை, உயிரை அல்லது உணர்வை உணர முடியும்.

இது மற்ற எந்த உயிரினத்தின் உடலுக்கும் கொடுக்கப்படவில்லை.

அப்படிப்பட்ட வள்ளல் பிரானாகிய உயிர் இந்த உடலோடு உறவாட வருகின்ற உன்னதமான மிக உயரிய வாசல் வழி எது? என்றால், அதுவே, 10 ஆம் வாசல். ஆம்! அதுவே நம் தலையில் உள்ள பீனியல் சுரப்பி இருக்குமிடமாகிய சகஸ்ரஹாரம் என்ற பிரம்மரந்திரம். பிரம்மரந்திரம் என்பது உச்சந்தலைப் பகுதி. இதுவே, மனித உடலில் இறைவன் உள்ளே நுழைந்த வாசல் என்கின்றனர் மகான்கள்.

இவ்வாறு நுழைந்து விட்ட உயிரைத்தான் சீவன் என்கின்றோம்.

இந்த சீவன் தான் **சிவம்** என்கின்றார் திருமூலர்.

அதாவது, தெள்ளத் தெளிந்தார்க்கு **சீவன் சிவலிங்கம்** என்கின்றார்.

**இந்த சீவன் – உயிர்** குடியிருக்கும் உடலில் உள்ள கள்ளப் புலன்கள் எல்லாம், கண்டபடி அலையவிடாமல், அந்த இறைவனை தேடி அறிவதற்கான அற்புதமான விளக்கு என்கின்றார். எப்படி இந்த புலன்கள் எனும் விளக்கைக் கொண்டு இறைவனைத் தேடிக் காணவேண்டும் என்று மேலும், திருமூலர் சொல்கின்றார்.

"உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பறந்து திரிவாரே
கள்ள மனமுடைக் கல்வி இலோரே! – திருமந்திரம்.

மனம் என்ற நிலையில் பல்வேறு எண்ணங்களை ஏற்றி வைத்துக் கொண்டு, எண்ணற்ற விசய, சுகங்களில் சிக்கி கொண்டுள்ள மனம் தன்னையே விசாரித்து, விழித்துக் கொண்ட விவேகத்தினால், கவனித்தால் மனம் கடந்த அறிவு நிலையில் அனேக ஆக்கப்பூர்வமான குண நலன்கள் நம்மிடமிருந்து வெளிப்படும். அத்தகைய நல்ல குணங்களைக் கொண்டு, பல்வேறு நல்ல காரியங்களை செய்து, ஏற்கனவே செய்த கெட்ட செயல்களில் இருந்து விடுபட வேண்டும். அதுவே, உண்மையாக புனித தீர்த்தங்களில் நீராடுவதற்குச் சமம். அதைவிடுத்து, வெளியே உள்ள தீர்த்தங்களை நாடி செல்பவர்கள் வினைகள் எல்லாம் அதில் குளிப்பதினால் தீர்ந்துவிடாது.

இவர்கள் கள்ள மனதைக் கொண்டு கண்டபடி இதுப்போன்று அழைந்து திரிந்துக் கொண்டிருக்கின்ற **ஆத்ம ஞான கல்வி** அறிவு இல்லாதவர்கள் என்கின்றார்.

உண்மையில் உள்ளத்துள்ளே இறைவனைக் காணாது, வேறு எங்கெங்கோ தேடி அலையும் வீணரை **மூடர்கள்** என்றே திட்டுகின்றார்.

உடம்பில் நன்மையும், தீமையும் சேர்த்தே இயற்கை அன்னை படைத்துள்ளாள். இந்த உடம்பில் தீமை சேர்த்து படைத்ததின் காரணம், நெல்லுக்கு உமி இல்லை என்றால் மீண்டும் முளைக்காது.

ஆகவே, இந்த தேகத்தில் கேட்டையும், ஆக்கத்தையும் சேர்த்து படைத் திருக்கிறார். கேடாகிய உமி நீங்கினால் அரிசி மீண்டும் முளைக்காது. (புற உடம்பாகிய மும்மல தேகம் நீங்கினால்) அதேபோல் கேடான மும்மலம் என்னும் உமி நீங்கினால் மலமற்ற ஒளி உடம்பாகிய ஜோதி உடம்பு உண்டாகும்.

ஜோதி உடம்பு உண்டானால் மீண்டும் பிறக்காது (உமி நீங்கினால் அரிசி முளைக்காததுப் போல). ஜோதி உடம்பு என்பது '**அறிவு உடம்பு**' என்று அறிய வேண்டும்.

ஏனெனில், மகான்கள் ஒளித்தேகம் அடைந்தார்கள், ஜோதி உடம்பு அடைந்தார்கள் என்று கூறுவதெல்லாம், நாம் எப்படி நடைமுறையில் நன்றாகப் படிக்கின்ற ஒரு மாணவனைப் பார்த்து, அவன் மிகவும் பிரகாசமான பையன் (Bright Student) அவனுக்கு மிகவும் பிரகாசமான எதிர்காலம் இருக்கின்றது என்கின்றோம். அப்படித்தான் இந்த ஒளியுடம்பு, ஜோதி உடம்பு என்பதை எடுத்துக் கொள்ளவேண்டும்.

கங்கையிலே காவிரியில் நூறு முறை மூழ்கி

கணக்கற்ற திருக்கோயில் கால் தேய சுற்றி

வெங்கொடிய பல நோன்பு ஏற்றுடலை வருத்தி

வேதங்கள் கூறுகின்ற யாகமெல்லாம் செய்து

பங்கமிலா வேதியர்க்கு கை பணம் அள்ளி தந்து

பசுவைப் பூசித்து அதன் கழிவை உண்டு

தங்களுயிர் மோட்சத்தை அடைவதற்கே முயலும்

தயவில்லார் சத்தியமாய் முத்தியதை யடையார். – வள்ளலார்.

அப்ப யாருங்க முக்தியை அடைகின்றார்கள்? என்றால், தன்னை உணர்ந்த தத்துவ ஞானிகள் மட்டும்தான் அடைகின்றார்கள்.

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்
சென்னியில் வைத்த சிவன் அருளாலே". – திருமந்திரம்.

தன்னை அறிந்துகொண்டவர்கள் தான் மெய்ஞானிகள். அவர்கள் தன்னை அறிந்து தாமே சிவமாகிவிட்டதால் முற்பிறவியில் செய்த பாவ, புண்ணிய முடிச்சுகளை இப்பிறவியில் இல்லையென்று ஆக்கிவிடுவார்கள். அடுத்த பிறவியென்ற ஒன்றே அவர்களுக்கில்லை. இப்பிறவியிலும் வரக்கூடிய வினைகளையும் தடுத்துவிடுவார்கள். ஏனென்றால் அவர்கள் தமது தலையில் சிவனுடைய அருளை வைத்திருப்பதால். அதாவது, அவர்கள் ஞானயோகப் பயிற்சிகளின் மூலம் குண்டலினி சக்தியைத் தங்களது சகஸ்ராரத்திலே நிலை நிறுத்தியவர்கள் என்று திருமூலர் கூறுகிறார்.

ஆக இப்படிப்பட்ட **சீவன் – உயிர்** குடியிருக்கும் தற்காலிகமான இடம்தான் இந்த உடல். ஆகவே, இந்த உடலைப் பெற்ற பயன், அந்த உத்தமனை உணர்வது மட்டும்தான்.

மீண்டும், திருமூலர் இன்னும் வலியுறுத்துகின்றார்.

சீவன் என சிவன் என்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவனாயிட்டு இருப்பரே – திருமந்திரம். 1993

சீவனும், சிவனும் வேறு வேறு பொருள்களில்லை. இரண்டும் ஒன்றே. ஆனால், அறியாமையினால் தன்னை இந்த உடலாகப் பாவித்துக் கொண்டு, தனித்து அடையாளப்படுத்திக் கொண்ட சீவர்கள் தானே சிவம் என்பதை அறிந்திருக்கவில்லை. ஆகவே, அந்த ஆத்மாவைப் பற்றிய ஞானம் இந்த அரிதான மனித உடலைக் கொண்டு பெற்றுவிட்டால், சீவனார் சிவனாகவே உள்ளார் என்பது தெள்ளத் தெளிவாகும் என்கின்றார்.

**ஊழிப் பெருவெள்ளம் சூழ்கிறது.**

**ஓடிப் பிழைக்க வேண்டுமென்றால் ஓடம் வேண்டாமா?** என திருமூலரின் பேரன் சிவவாக்கியர் சொல்கிறார்:

"ஓடம் உள்ள போதெல்லாம்,
நீர் ஓடியே உலாவலாம்;
ஓடம் உள்ள போதெலாம்..
உறுதி பண்ணிக் கொள்ளலாம்;
ஓடமும் உடைந்த போதில்,
ஒப்பிலாத வெளியிலே…
ஆடும் இல்லை கோலும் இல்லை
யாரும் இல்லை ஆனதே!" – சித்தர் சிவ வாக்கியர்.

**மேய்ப்பவன் –** உயிர் அல்லது பிராணன்

**ஆடுகள் –** மனம், உடல், சித்தம், எண்ணங்கள்

**கோல் –** இறைவழிபாடு, தியானம்.

இதைத்தான் **சரியை, கிரியை, யோகம், ஞானம்** என்கின்றோம்.

இதற்கு அடுத்து ஒரு நிலை உள்ளது. அதுதான் துரியாதீதம்.

துரீயாதீதம் என்ற ஐந்தாம் நிலையில், வெட்டவெளியில் "நான்" என்ற எண்ணமே அழிந்து போவதால் (ஆடுகள் இறந்து போவதால்), வழிபாடு/ஆன்மீகப் பயிற்சிகள் எல்லாம் விட்டுப் போகும். (ஆடுகள் செத்தபின் தொரட்டியைத் தூக்கி வீசிவிடுகிறோம்).

தொரட்டி என்ற வார்த்தை வட்டார வழக்கில் கிராமப் புறங்களில் உள்ளது. நீண்ட கம்பு ஒன்றின் நுனியில் கொக்கி (அ) சிறிய கதிர் அரிவாள் மாதிரியான ஒரு உலோக ஆயுதம் இணைக்கப்பட்டிருக்கும்.. கைக்கு எட்டாத உயரத்தில் இருக்கும் பழங்கள் பறிக்க.. கிளைகளை வளைத்து கொடுக்க உபயோகப்படுத்தப்படுவது. அந்த கொக்கியில் மாட்டி இழுக்கறதுன்னு வைச்சுக்கலாம்.

இறைவன் என்ற நிலையில், (இந்த ஆடுகள் செத்தபின் தொரட்டியை வீசிய பின் மேய்ப்பவனை வேலையிலிருந்து நீக்கி விடுகிறோம்).

ஓடத்தை அதாவது  இந்த உடலை ஓட்டம் ஓட்டம் என்று மாற்றிப் பொருள் கொள்ளலாம்.

உடலில் ப்ராணன் ஓடிக் கொண்டிருக்கும் வரை நீங்கள் உலகிலே ஓடி உலாவலாம்! உயிரோட்டம் உள்ளபோது உங்களை நீங்கள் கிள்ளிப் பார்த்து உயிரோடிருப்பதை உணரலாம். இந்த உடல் நீங்கினால், உலக இன்ப துன்பங்கள் பாதிக்காது. ஆகவே, இந்த சுக துக்கங்கள் உடலைச் சார்ந்தவைகள்.

ஆக, அதை இந்த ஓடம் உள்ளபோதே உறுதி செய்து கொள்ளலாம்.

இந்த உடம்பு என்ற ஓடம் இருக்கும் போதே பிறவிக் கடலைக் கடப்பதை சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்ற வழிமுறைகளில் வீடு பேற்றை உறுதி செய்து கொள்ளலாம் என்கின்றார்.

அப்ப இந்த ஓடம் எனும் உடல் எதில் உண்டாகியிருக்கின்றது என்று தெரிய வேண்டாமா?

ஆம்! இது பஞ்சபூதங்களால் உண்டாகியுள்ளது.

**"பரமாய சக்தியுட் பஞ்சமாபூதந்**

**தரமாறிற் றோன்றும் பிறப்பு" –** ஔவையார்

பஞ்சபூதங்களின் நிலை மாற்றமே பிறப்பு.

இயக்க நிலையாக மாற்றம் அடைந்து , பரிணாமம் அடையும் பொழுது ஆகாயம் என்ற முதல் பூதமும் அதனைத் தொடர்ந்து வரிசையாக, ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்று வரிசையாக ஐந்து பூதங்களாக பஞ்ச பூதங்களாக தோன்றுகிறது .

மனிதன் முதலில் நிலத்தைக் கண்டான்

பிறகு நிலத்தை தோண்டும் பொழுது நீரைக் கண்டான்.

அதனுள் மறைந்து கொண்டு இருந்த நெருப்பு வெளிப்படும் பொழுது நெருப்பைக் கண்டான். மேலும் ஆராய்ந்து நோக்கும் பொழுது, அவற்றில் காற்று ஊடுருவி நிரம்பி இருப்பதைக் கண்டான். இவைகள் அனைத்தும் ஆகாயத்திலிருந்து தோன்றுகிறது என்பதை உணர்ந்தான்.

வெளி எனும் முதல் பூதம் தான் இந்த பஞ்ச பூதங்கள் தோன்றுவதற்கு முழு முதற் காரணம் என்பதை உணர்ந்து கொண்டான். அதாவது, மனிதன் எவ்வாறு, எந்த நிலையில், பஞ்ச பூதங்களை உணர்ந்து கொண்டானோ? அதே நிலையிலேயே பஞ்ச பூதங்களை வரிசைப்படுத்தி விட்டான்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற நிலையில் ஐந்தாக வரிசைப்படுத்தி விட்டான்.

இந்த பஞ்ச பூதங்கள் தான் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கூடி, கால மாற்றத்திற்கு ஏற்றவாறு உயிரினம் உருவாக காரணம் ஆகிறது. அதாவது பல உடல்கள் உருவாகக் காரணம் ஆகிறது.

அதாவது, என்றும் அசையாத சிவம் என்ற இருப்பு நிலை தனது சக்தியைக் கொண்டு, பஞ்சபூதங்களை படைத்து, அதிலே அனைத்தையும் அசைத்து, இயக்க நிலையாகி, உயிரினங்களாக பரிணாமம் அடைகிறது.

ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாற்றம் அடைகிறது. அதாவது ஒன்று அதன் இயல்பில் மாற்றம் அடைந்து மற்றொன்றாக உருமாற்றம் அடைகிறது.

இதனையே ஔவையார் தரம் மாறுதல் என்கிறார்.

தரம் மாறுதல் என்றால் இயல்பில், அமைப்பில், வடிவத்தில் என்று பல்வேறு தரப்பட்ட நிலைகளில் மாற்றம் அடைகிறது என்று பொருள்.

இருப்பு நிலை என்று சொல்லப்படுகின்ற பரம் எனும் வெட்டவெளி, அனைத்தையும் தன்னுள் அடக்கி வைத்து இருக்கிறது. காலம் வரும் பொழுது அனைத்தையும் தனது ஆற்றலைக் கொண்டு வெளிப்படுத்துகிறது.

தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற எல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பு இன்றி எம் பெருமான் அடி ஏத்தார்
அழைக்கின்ற போது அறியார் அவர் தாமே. – திருமந்திரம்.

செடிகளிலும், கொடிகளிலும் பூத்து வளர்கின்ற இளந்தளிர்கள் ஒரு நாள் காய்ந்து போகின்றது. அவ்வாறே, மலருகின்ற மலர்கள், காய்க்கின்ற காய்களும், பழுத்த பழங்களும் என உருவாகிய எல்லாமே ஒரு நாள் காய்ந்து சருகுகளாக மாறி விடும்.

இவ்வாறு, தினம், தினம் இத்தகைய இறப்பைக் கண்ட மனிதன் தன் வாழ்க்கையும் இதுபோல ஒரு நாள் முடியும் என்றாலும், எது நிரந்தரமானது, எவைகள் நிரந்தரமற்றவைகள் என பிரித்துப் பார்க்கத் தெரியாமல், இறக்கும் நாள் வருகின்ற வரைக்கும் இறைவனை உணராத மூடர்களாகவே இவர்கள் இருக்கின்றார்கள் என்கின்றார்.

சென்றுணர் வான்திசை பத்துந் திவாகரன்
அன்றுணர்வால் அளக்கின்றது அறிகிலர்
நின்றுணரார் இந்நிலத்தின் மனிதர்கள்
பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற மாயமே. – திருமந்திரம்.

சூரியனின் பொன்னிறக் கதிர்கள் 10 திசைகளிலும் சென்று சிவசூரியன் உடம்பில் கீழும் மேலும் சூழவுள்ள எட்டுத் திசைகளிலும் சென்று அறிவான். அவன் உணர்வு மயனாக இருந்து உடம்பில் வியாபித்த அறிதலை உலகவர் அறியவில்லை இந் நிலவுலகில் வாழ்கின்ற மக்கள் நான் என்னும் அகங்காரம் கெட்ட ஞானியரிடம் அவன் கலக்கின்ற மாயத் தன்மையும் உணர மாட்டார், என்னே அறியாமை?

<u>தாயுமானவர் பின்வருமாறு கூறுகின்றார்.</u>

யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதும் ஆக முடிகின்ற வாழ் நாளில்,
உள்ளதே போதும் நான் நான் எனக் குளறியே
ஒன்றைவிட்டு ஒன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனது அற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்,
பார்க்கும்இடம் எங்கும் ஒரு நீக்கம் அற
நிறைகின்ற பரிபூரணானந்தமே. – (பரிபூரணானந்தம் – 10)

கணக்கெடுத்துப் பார்த்தால், பசி தீரச் சாப்பிட்டிருக்கிறோம்; படுத்து நன்றாக உறங்கியிருக்கிறோம்.

அல்லாமல் வேறென்ன?

உள்ளதே போதும் என்று ஒரு பொழுதேனும் தோன்றியிருக்கிறதா?

'**நான், நான்**' என்னும் அறிவற்ற உளறல் என்றைக்காவது அற்றுப் போயிருக்கிறதா?

அதை விடுவோம், இதைப் பிடிப்போம். இதை விடுவோம், தாவி அதைப் பிடிப்போம் அல்லது வேறொன்றைப் பிடிப்போம் என இவ்வாறு தாவித் தாவிப் பிடித்துக் கடைசியில் பிடிமானமில்லாமல் பற்றாகிய பாழுங் கிணற்றுக்குள் விழுந்து அமிழ்ந்து போகின்றோம்.

மனிதப் பிறவியின் மகத்துவம் அறிவார் ஒருவருமில்லை. உரைக்க வந்த உத்தமர்கள் வழியில் வரவும் யாரும் விரும்புவதில்லை.

உண்மையில் நான் என்னை என்னுடையது என்பவைகளே இவ்வளவு இன்னல்கட்குக் காரணமாகின்றன.

ஸ்தூல் தேகமும் நாமல்ல கண். காது, மூக்கு, வாய் முதலியவைகளும் நாமல்ல, ஸூக்ஷ்ம கருவிகளாகிய மனம் புத்தி சித்தம் அஹங்காரமும் நாமல்ல, பிராணனும் ஓர் தத்துவமேயன்றி வேறல்ல. அதுவும் ஐடமே.

(நான் உயிரே போனாலும் இதை மட்டும் செய்ய மாட்டேன் என்று நடைமுறையில் பேசுகின்றோம் அல்லவா?) இதனாலேயே, இந்த பிராணனும் தானல்ல.

**ஜாக்கிர, ஸ்வப்பன, ஸுசுப்தியும்** நானல்ல.

இரு நண்பர்கள் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்ளும் போது, ஒருவன் தன் கனவைப் பற்றி தன் நண்பனுடன் பேசினான். நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவில் நான் இறந்துவிட்டேன், என்னைக் கண்டு எல்லோரும் அழுகின்றார்கள். அதன்பிறகு என்னை அலங்காரம் செய்து பாடையில் படுக்க வைத்து எடுக்கின்றார்கள். அபோது நான் திடீரன்று விழித்துக் கொண்டேன் என்றான். இதைக் கேட்ட அவனது நண்பன் அது எப்படி? நீயே இறந்து விட்டாய், பிறகு எப்படி உன்னை அலங்காரம் செய்து பாடையில் படுக்க வைத்து வரை எல்லாம் உனக்குத் தெரிந்தது? அவ்வாறு, நீ செத்ததுப் போல கனவு கண்டது உண்மையானால், செத்தது உண்மையாக இருக்க வேண்டும். அப்போது, உன்னால் உன்னை அலங்காரம் செய்து பாடையில் படுக்க வைப்பது வரை எதுவும் உனக்குத் தெரியக் கூடாது. அப்படி உனக்குத் தெரிந்தால் நீ செத்து தபொய்யாயிருக்க வேண்டும் என்றான் இவனது நண்பன். ஆனால், அவன் கண்ட கனவோ உண்மை. அதாவது, அவன் கண்ட கனவுக்கு எவர் சாக்ஷியோ அவர்தான் ஆத்மா.

ஸுஷூப்தியில் நான் சுகமாய்த் தூங்கினதை எவர் கண்டாரோ?

அவர்தான் **ஆத்மா.**

அந்த ஆத்மாதான் உண்மையில் நீ.

நீதான் கடவுள்.

நீ மனமென்னும் மாயாஜால வித்தைக்காரனிடம் சிக்குண்டு, அவன் வசமாக மாறி இருப்பதினால், வேறு ஒரு பெயருடன் விளங்குகிறாய்.

இந்த மனத்தின் மூலமாகவே உன்னை நீ அறியவேண்டுமானால், அவன் ஒருக்காலும் உன்னைக் காட்டிக் கொடுக்கவே மாட்டான் – அப்படிப்போனாலும் காட்டுவதாகவே அழைத்துப்போய் அல்லற்ப்படுத்தி விடுவான்.

இவனை நீ வேறு படுத்தி, இவனை துறந்தால் மட்டும்தான் உன்னை நீ அறியலாம்.

திருடனைக் கொண்டு திருடனைக் கண்டுபிடிக்க முடியுமா?

காட்டிக் கொடுக்க மாட்டான்.

ரஜோ, தமோ, குணங்களிருக்கும் வரை மனம் மட்டுமே விளங்கும், சுத்த ஸாத்வீக குணம் உண்டாகி வெளிப்பட்டால் அங்கு ஆத்மா விளங்கும்.

மணிகள் தோரும் சரடு ஊடுறுவி இருப்பதுப் போல, உடல்கள் தோரும் இறைவன் உயிராக ஊடுறுவி இருக்கின்றக் காரணத்தினால், அவனை உணர்வது என்பது, உண்மையில் நாம் நம்மை எல்லாவற்றிலும் உயிராய் காண்பதில்தான் அடங்கியுள்ளது.

ஆன்மாவாகிய நீ கலந்திருக்கின்றமையால் யாவையும் யாரையும் உயர்வு தாழ்வில்லாமல் சமநோக்காய்நோ க்கும் திறனுள்ளவனானாய் (முடிவில்மௌனமே.)

பட்டினத்தாரும் அவ்வாறே. முற்றத் துறக்கும் முன் வணிகக் கணக்கு எழுதியவர். தாயுமானவரைப்போலவே பட்டினத்தாரும் வாழ்க்கைக் கணக்கு எடுக்கிறார்:

உண்டதே உண்டும், உடுத்ததே உடுத்தும்,

அடுத்து அடுத்து உரைத்ததே உரைத்தும்,

கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும்

கழிந்தன – கடவுள் நாள் எல்லாம்;

விண்டதா மரைமேல் அன்னம் வீற்று இருக்கும்

விழவு அறா வீதி வெண் காடா,

அண்டரே போற்ற அம்பலத்து ஆடும்

ஐயனே, உய்யுமாறு அருளே. – பட்டினத்தார், திருவெண்காட்டுத் திருவிசைப்பா.

உண்டதைத்தான் உண்கிறோம். உடுத்ததைத்தான் உடுக்கிறோம். பேசியதையே திரும்பத் திரும்பப் பேசுகிறோம். பார்த்ததையே பார்க்கிறோம். கேட்டதையே கேட்கிறோம். திரும்பிப் பார்த்தால், ஐயோ, கடவுளைக் கண்டு கொள்வதற்காக வழங்கப்பட்ட நாட்களை அல்லவா வீணாக்கியிருக்கிறோம்?

திருவெண்காட்டு ஈசா, இவ்வாறு உழற்றாமல், என்னைச் சரியான திசைக்குத் திருப்பி ஆட்கொள்ள மாட்டாயா?

அறிந்ததைக் கணக்கெடுக்கும் திருமூலர்.

தாயுமானவரைப் போலவும் பட்டினத்தாரைப் போலவும் கணக்கெழுதும் பயிற்சி உள்ளவரா திருமூலர் என்று தெரியவில்லை. என்றாலும் அவரும் கணக்கெடுக்கிறார். ஆனால், இவர் போடும் கணக்கு கொஞ்சம் வேறாக இருக்கிறது. தாயுமானவரும் பட்டினத்தாரும் உண்டதை, உடுத்தியதைக் கணக்கெடுக்கிறார்கள்.

திருமூலரும் தான் அறிந்ததைக் கணக்கெடுக்கிறார்:

உற்று அறிவு ஐந்தும், உணர்ந்து அறிவு ஆறுஏழும்,
கற்று அறிவு எட்டும், கலந்து அறிவு ஒன்பதும்,
பற்றிய பத்தும், பலவகை நாழிகை
அற்றது அறியாது அழிகின்ற வாறே. – (திருமந்திரம் 741)

மெய், வாய், கண், மூக்கு, செவி என்று புலன்களின் வழியாக உற்று அறிந்த வகையில் அறிவு ஐந்து; புலன்களால் உற்று அறிந்தவற்றையெல்லாம் மனத்தினுள் வாங்கிக் கொண்ட வகையில் அறிவு ஆறு; வாங்கிக் கொண்டவற்றையெல்லாம் வகைப்படுத்தித் தொகுத்து, உணர்ந்துகொண்ட வகையில் அறிவு ஏழு.

முற்றறிவு பெறுவதற்கு, உற்றும் உணர்ந்தும் அறிந்தவைகள் போதாதென்று, அறிஞர் பெருமக்கள் உணர்ந்து சொன்னவற்றைக் கசடறக் கற்று, அறிந்த வகையில் அறிவு எட்டு; கசடறக் கற்று, அறிந்தவற்றுக்குத் தக நின்று, தானே பட்டும் அறிந்த வகையில் அறிவு ஒன்பது; பட்டு அறிந்தவற்றையெல்லாம் 'தனது' என்று பற்றிக்கொண்ட வகையில் அறிவு பத்து.

அறிந்தாலும் என்ன, அறியாவிட்டாலுந்தான் என்ன? என்று கருதத்தக்க அற்பங்களை எல்லாம் அறிவதிலேயும் அவற்றைத் தனதாக்கிப் பற்றிக் கொள்வதிலேயும் காலம் கழிகிறது.

காலம் கழிகிறது என்பதையே அறியாமல், ஐயோ, வாழ்வு அழிகிறதே?

இதற்குக் காரணம், நமது மனம்.

மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட விசய, சுகங்களில் சிக்கிக் கொண்டு, அதன் போக்கில் போய்க்கொண்டு, அந்த மனதிற்கு பிறப்பிடமான உயிரை உணராமல் உள்ளது.

ஆகவே, இவ்வாறு அங்குமிங்குமாக அலைக்கழிக்கும் மனம் என்னும் மாடு மட்டும் அடங்கினால் போதும், அவனுக்கு முக்தி நிச்சயம் என்கின்றனர் மகான்கள்.

**மனமென்னும் மாடடங்கில் தாண்ட வக்கோனே, முத்தி**
**வாய்த்ததென்று எண்ணேடா தாண்ட வக்கோனே. – இடைக்காட்டுச் சித்தர்**

மனம் என்கிற மாட்டை அடக்கும் வழி என்ன?

அந்த மாட்டின் கொம்பைப் பிடித்து அடக்க வேண்டும்.

மனதை விசாரித்துப் பார்ப்பதுதான் அதன் கொம்புகள். மனம் தன்னை பலவாறாகப் பாவித்து வைத்துக் கொண்டிருக்கும். அந்த எண்ணங்களின் அடிப்படையில், மனம் அதன் போக்கில் போய்க்கொண்டிருக்கும்.

பேச்சை மனதில் ஒடுக்கி, மனதை புத்தியில் ஒடுக்கி, விழித்துக் கொண்ட விவேகமான புத்தியை இருதயக் குகையில் ஒடுக்க வேண்டும். அந்த இருதயக் குகையில் இறைவன் 'சித்' ஆகாசமாக இருக்கின்றான். இவ்வாறு அந்த உணர்வு வெளியை சித் அனுபவத்தை உணர்ந்தவன் அந்த 'சத்' என்ற இருப்பாகவே ஆகின்றான்.

இந்த பௌதீக உலகம் உண்டாக்கப்பட்டு, உடல்கள் பெறப்பட்ட நிலையில், அன்னமய கோஷம் பிராணமய கோஷம் மனோமய கோஷம் விஞ்ஞானமய கோஷம் மற்றும் ஆனந்தமய கோஷம் என்ற இந்த ஐந்து தளங்களுக்கும் அப்பாற்பட்டு தனித்த உயிர் என்ற தன்மைக்கு அப்பாற்பட்டு இருக்கின்ற இந்த சத் மற்றும் சித் என்ற

இரண்டு உயர்பரிமாண தளங்களில் நுழைகின்றவன் மட்டுமே தன்னிருப்பை தான் உணர்கின்றான்.

**சித்** என்றால், இந்த பௌதீக உடலில் உள்ள அனுபவத்திற்கான உணர்வுவெளி. **சத்** என்றால், ஐந்து கோஷங்களுக்கும் அப்பாற்பட்ட இருப்பு நிலை. அதுவே வெட்டவெளி. அதுவே அம்பலம். இதைத்தான் "**திருச்சிற்றம்பலம்**" என்கிறோம்.

திரு என்ற இறைவன் **சத் – சித்** என்ற நிலையில் நிர்குண வடிவாக சத் என்பதாகவும், சற்குண வடிவில் சித் என்பதாகவும் இருக்கின்றான் என்பதை எடுத்துக் கூறுவதுதான் நமது சனாதன தர்மம்.

ஆகவே, நாம் சித் நிலையில் உணர்வு நிலையில் இந்த உலகத்தை அனுபவமாக்கும் போது, இதன் உண்மைத் தன்மையை உணர்ந்துக் கொண்டு அனுபவமாக்கினால், இதனால் நாம் பாதிப்படைய மாட்டோம்.

சித் என்ற உணர்வு வெளியில் உண்டாகின்ற மாறுபடுகளைக் கொண்டு, அதன் மாயா லீலைகளை இரசிக்கலாம்.

அதே சமயம், நமது உண்மை இருப்பு நிலையான சத் என்ற நம் சுயத்தை இந்த உலகத்தில் உடல் உள்ள போதே அனுபவமாக்கும் வித்தை யைத்தான் **தகர வித்தை** அல்லது **தஹர வித்யா** என்பது நம்முள்ளே ஒரு வெளி (தஹரம், ஆகாயம், (Space)– அகவெளி உள்ளது.

அதில் எழுந்தருளியிருக்கும் இறைவனை தியானத்தின் மூலம் தேடுவதும், அடைவதுமே தஹர வித்யா அல்லது தஹராகாச வித்தை எனப்படும். இந்த தஹர வித்தை சாந்தோக்கிய உபநிடதத்தின் எட்டாம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆக, இவ்வாறு நமது மனதைக் கொண்டு, அந்த தூய அறிவாகிய இறைவன் இருக்கும்இருதயக்குகையில் கொண்டு சென்று நிலை நிறுத்தினால், அங்கே உறையும் உயிர் அந்த ஆத்மாவை சத்– காட்டிக் கொடுக்கும். அதுவே நம் ஸ்வரூபம்.

இவ்வாறு சீவன் சிவனை அறிவதே **சீவ – ப்ரஹ்ம ஐக்கியம்** எனப்படும்.

இதைத்தான் சைவ சிந்தாந்தம் **பசு – பதி – பாசம்** என்கின்றது. அதாவது, பசுவாகிய சீவன், பதியாகிய சிவனை மட்டுமே விரும்பும் பாசத்தினால் உண்டாகின்ற பேறு ஒன்றே மனிதன் அடையத்தக்க வீடுபேறு.

பலவழிகளில் சலனமடையும் மனதை சரியான வழியில் புரிதலினால் நிலை நிறுத்தி,, அனேக வழிகளில் செல்லவிடாமல், புருவ மத்தியில் உள்ள சிதாகாசம் எனும் இருதயக் குகையில் மனதை நிலை நிறுத்தி வருகின்றவர்களுக்கு நாளடைவில் **சுத்த அறிவு** நிலை அனுபவம் ஆகும்.

இதுவே, நம்முடைய உண்மையான சுயம். இதுவே **பாரமார்த்திக சத்தியம்**.

இதிலிருந்து வெளிப்பட்டு மனம் இந்த உலக விவகாரங்களில் விளையாடும் போது, உண்டாகின்ற வியாவகாரிக சத்தியம் என்னும் நிலையில், விவகாரம் செய்கின்ற நிலையிலே கூட, இங்கு அனுபவத்திற்கு வருகின்ற பல்வேறு உடல்களிலும் தன்னையே அதாவது தன்னுயிரையே காணுகின்ற மிக உயரிய பரிமாணத்தை மனம் அடைந்த நிலையில், இருமைகள் மறைந்து, "இருப்பதெல்லாம் இறைவனே" என்பது அனுபவமாகும்.

இவ்வாறு, இந்த உடலின் வாயிலாக, உலக விவகாரங்கள் பல நடைப் பெற்றுக் கொண்டிருந்தாலும், சலனமடையும்போது, எப்பொழுதேனும் அந்த மனம் சலனமடையும் போது, அவைகள் காரியமாக உருப்பெறும். அந்த காரியங்களையும் எப்போதும் ஈஸ்வர நிமித்தம் செய்யும்போது, அதுவே, அந்த மனதிற்கு 'நான்' என்ற ஆணவத்தை அகற்றி, நம் சொரூப ஆனந்த நிலையை கொடுக்கும். அதாவது, இறைவனை அனுபவமாக உணருகின்ற சமாதி நிலையை சாஸ்திரம் மூன்றாக வகுத்துக் கொடுத்துள்ளது.

அவைகள்,

சவிகல்ப சமாதி

நிர்விகல்ப சமாதி

சகஜ சமாதி என்பன.

இது மனம் இன்னும் சுறுசுறுப்பாக இருக்கும் நிலையில், பிரம்மத்தின் ஒரு பார்வையைப் பெறும் நிலையாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அறிபவன், அறிவு என்னும் வேறுபாடுகள் மறையாமலே, இரண்டற்ற பிரம்மத்தின் வடிவை அடைந்த மனதின் ஒருமைபாடு நிலை ஆகும்.

நிர்விகல்ப நிலை என்பது வெட்டவெளி தன்மை, சகஜ சமாதி என்பது, இந்த இரண்டிலும் மாறி, மாறி இருந்தாலும், சகஜமாக இருப்பது. ஆக, இந்த நிலையை அடைய அனேக வழிகள் உள்ளன.

இப்படிப்பட்ட மனதை அடக்கும் வழிகள் நம்முடைய நடைமுறையில் பல உள்ளன – அவைகளைத்தான் பூசைகள், ஜெப, தபங்கள், தியானம், மந்திர உச்சாடனம் என ஏராளமானவைகளை நாம் செய்துக் கொண்டுள்ளோம்.

இவைகள்தான் மனம் என்னும் மாட்டை அடக்கக் கூடிய கொம்புகள். எனவே, இவற்றைப் பிடித்து, அந்த மனம் என்னும் மாட்டை அடக்க முயற்சிக்க வேண்டும் என்கின்றனர் மகான்கள்.

இதற்கான தந்திரம் ஒன்றையும் திருமூலர் சுட்டிக் காட்டுகின்றார்.

மன்மனம் எங்கு உண்டு வாயுவும் அங்கு உண்டு;
மன்மனம் எங்கு இல்லை வாயுவும் அங்கு இல்லை;
மன்மனத்து உள்ளே மகிழ்ந்து இருப்பார்க்கு
மன்மனத்து உள்ளே மனோலயம் ஆமே. – (திருமந்திரம் 620)

எண்ணங்களின் எழுச்சியில் உண்டானது மன்மனம். மனம் என்பதும் வாயு என்பதும் ஒன்றே என்று இந்த பாடலின் வாயிலாக திருமூலர் உறுதி செய்கின்றார்.

ஆகவே, இந்த மனம் எங்கிருக்கின்றதோ? அங்கே வாயு எனும் பிராணனும் உண்டு. மனம் எங்கு இல்லையோ? அங்கே பிராணனும் இல்லை. ஆகவே, மனமும், பிராணனும் (உயிரும்) ஒன்றே என்கின்றார்.

அதாவது, உயிரின் அதிசய சக்திதான் இந்த பிராணன் மற்றும் மனம். ஆனால், இவைகள் எல்லாம் உயிரிடமிருந்து வெளிப்பட்ட பல்வேறு ஆற்றல் பரிமாணங்கள் என்றா பார்க்க வேண்டும். ஒருவகையில் இந்த உடல், பிராணன், மனம், புத்தி மற்றும் காரண சரீரம் என எல்லாமே ஒன்றே.

அதனால்தான் சிலர் பிராணன் போய்விட்டது அவர் இறந்துவிட்டார் என்கின்றர். நாம் என்ன சொல்கின்றோ, மனம் இந்த உடலை விட்டு வெளியேறி, அடுத்த உடலை நாடுகின்றது என்கின்றோம். இன்னும் சிலர் உயிர் போய்விட்டது என்கின்றார்கள்.

ஆனால், இந்த வார்த்தைகள்தான் இவ்வாறு மாற்றி, மாற்றி கூறப்படுகின்றதே தவிர, உண்மையில் உயிரின் தொடர்பு இந்த உடலிடமிருந்து விடுபட்ட மறுவிநாடி இந்த உடல், மனம், பிராணன் என எல்லாமே ஜடம் ஆகிவிடுகின்றன.

அப்படியானால், நம்முடைய ஆசா, பாசங்கள் எல்லாம் எங்கே சேகரிக்கப்பட்டு அடுத்த பிறவிக்கு வித்தாகின்றன. அதாவது விதைகளாகின்றன என்றால், அதுவே, காரண சரீரம் என்று பார்த்தோம். அதுவே சஞ்சித கர்மா என்றும் கூறுகின்றோம்.

ஆக, இந்த காரண சரீரம், சஞ்சித கர்மா என்பது என்ன என்றால், இதுவே, ஈஸ்வர சித்தம். பிரபஞ்ச மனம் என்பதினால்தான் நமது ஆசா, பாசங்கள் என்னும் வாசனைகள் காஸ்மிக் மைண்ட் என்னும் ஈஸ்வர சித்தத்தில் சேகரிக்கப்பட்டு, நமக்கான அடுத்த பிறவியைக் கொடுக்கின்றது என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்.

ஆக எண்ணங்களுக்கும், பிராணனுக்கும், புத்திக்கும் என பஞ்சகோஷங் களையும் கையாளுவது ஈஸ்வரன் என்பதினால், இங்கு உயிர் என்பது அந்த ஈஸ்வரன் என்ற பேருண்மையை உணர வேண்டும். ஆக உயிர் என்பது ஆத்மாவின் அதிசய சக்தி.

அந்த வகையிலே, மனம் ஒரு இடத்தில் இருந்தால், பிராணன் (உயிர்) அந்த இடத்தில் இருக்கும்.

மனம் இல்லாத இடத்தில், பிராணன் இருக்காது.

மனம் எங்கே போகிறதோ? அங்கெல்லாம் பிராணன் போகும். ஆனால், அதே மனம் தூக்கத்தில் தனது பிறப்பிடமான காரண சரீரத்தில் – ஈஸ்வரனிடத்தில் ஒடுங்கினால், அப்போது, அங்கே பிராணனும் ஒடுங்கிவிட்டால் இந்த உடலின் நிலை என்னவாகும்?

இந்த உடல் இறந்து விடும். அதாவது நாம் அபிமானித்துக் கொண்டிருக்கின்ற இந்த உடல் இறந்து போகும்.

ஆனால், மனம் ஒடுங்கிய நிலையிலும், இந்த உடல் பிராணனை வைத்துக் கொண்டு உயிரோடு இருக்கின்றதே? என்றால், அதற்குக் காரணம், அந்த ஆழ் உறக்கத்தில் ஈஸ்வரன் எனும் இந்த பிரபஞ்ச ஆற்றல் இந்த உடலைத் தக்க வைத்துக்

கொளவதற்கான தனது பிராண சக்தியைக் கொண்டு, இந்த உடலை உயிரோடு வைத்துக் கொண்டுள்ளது.

ஆகவே, இங்கு ஒன்றை உருவாக்குவதும், தக்கவைப்பதும், தேவையில்லை என்றால், அதை அழித்துவிடுவதும் ஈஸ்வரனின் செயல். அதாவது, அழித்தல் என்றால் வேறு ஒரு பரிமாணத்திற்கு அவைகளை கொண்டு செல்வது ஈஸ்வரன் என்ற ஆற்றல். ஆகவே, இந்த ஆற்றலை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது. ஆனால், அந்த ஆற்றல் வேறு ஒரு ஆற்றலாக மாறும் என்பதை மறந்துவிடக்கூடாது.

பிராணன் மனத்தொடும் பேராது அடங்கிப்
பிராணன் இருக்கில் பிறப்பு இறப்பு இல்லை;
பிராணன் மடைமாறிப் பேச்சு அறிவித்துப்
பிராணன் நடைபேறு பெற்று உண்டீர் நீரே. – திருமந்திரம்)567)

பிராணன் என்கிற உயிர்க்காற்றும், மனமும் நேரடித் தொடர்புள்ளவைகள். உயிர்க்காற்றுப் பெயர்ந்தால் மனம் பெயரும். மனம் பெயர்ந்தால் உயிர்க்காற்றின் நடை மாறும்.

உயிர்க்காற்று நடைமாறாமல் இருக்க வேண்டுமானால், மனம் மற்றும் பிராணன் ஆகிய இவைகள் மட்டுமல்ல, பஞ்ச கோஷங்களும் இல்லாத நிலையைக் கொடுக்கின்ற இருதயக் குகையில் உறையும், அந்த சிதாகாஷ நிலையாகிய வெட்டவெளியில் நம் கவனம் இருந்தால், இந்த நிலையில், இந்த உடல், மனம், பிராணன் என்ற பஞ்சகோசங்களும் அனுபவமாகாத நம் சொரூபம். அதாவது உண்மையான நமது சுயம் மட்டுமே அனுபவமாகும். இதுவே, '**நான் இருக்கின்றேன்**' என்ற தன்னுணர்வு நிலை. இந்த நிலையில், இனி ஈஸ்வரன் மட்டுமே இருப்பான். அவனே இந்த பிரபஞ்சமாக, படைக்கப்பட பல்வேறு உடல்களாக, இந்த உலகமாக இருக்கின்றான்.

**ப்ரஹ்மம்** = சிவம் = சத்.

**ஈஸ்வர்ன்** = சக்தி = சித்.

இந்த இரண்டும் ஒன்றாகும் நிலையில் ஆனந்தம் உண்டாகும். இதுவே பேரின்பம். இதை உணர்த்துகின்ற சிற்றின்பம்தான் உடல் உறவு.

**கணவன் – மனைவி** உறவு. ஆக, அவனே விராட். அவனே விஸ்வம். ஆக, இங்கு நடைப்பெறுகின்ற காரியங்கள் எல்லாமே, அவன் விருப்பத்தின் பேரில் நடக்கின்றது. ஆகவே, இவைகள் எல்லாம் **ஈஸ்வரக் காரியம்** என்று உணர்பவன் சீவன் முக்தன். இதுவே, **சகஜ சமாதி.**

இவ்வாறு உயிர் தன்னை உணரும்போது, மனம் அழிந்து, தூய அறிவு வெளிப்பட்டு பிறப்பு – இறப்பு என்ற அச்சத்திலிருந்து விடுதலை கிடைக்கும்.

பேச்சுப் பேச்சென்றும் உங்கள் பெரும் பேச்சின் பயனின்மையை உங்களுக்கு நீங்களே அறிவித்துக் கொண்டு பேச்சை உயிர் மூச்சில் அடக்கி, அந்த ஆத்மாவை உணர்க என்கின்றார் திருமூலர்.

மற்றபடி பிராணாயாம பயிற்சிகளாக வாசி செய்யுங்கள் என்று அவர் கூறவில்லை. **"வாசி"** என்னும் அக்ஷரத்தை மாற்றினால் **"சிவா"** என மாறும். இதில் ஒன்றிற்குள் ஒன்று மறைந்துக் கொண்டு இவ்வாறு மாறி வருகின்றன. (எரிவதை வெளியே இழுத்தால் கொதிப்பது தானே அடங்கும் என்பார்கள்.)

ஆகவே, வாசியிலும் செய்யலாம், மூசியிலும் செய்யலாம் என்று மூச்சுப் பயிற்சிகளை முக்கி, முக்கி முயற்சிக்காமல், முந்தியதை விட, பிந்தியதே குறுக்குவழி, சுகானந்த அதீத வழி.

வாசியு மூசியும் பேசி வகையினால்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம் எளிதாகுமே. – திருமந்திரம்.

மனம் எங்கில்லையோ? வாயுவும் அங்கில்லை. ஆகவே, உயிர் இந்த உடலில் உறவாடுகின்ற புருவ மத்தியில் நாட்டத்தை வைத்து, இதன் வாயிலாக மனமுதிர்ச்சி உண்டாகி, ப்ரஹ்ம தியானம் முறையில், நிர்குண உபாசனையில், தன் சொரூபத்தை எப்போதும் சிவோஹம் பாவனை செய்து மனதை சலிக்க விடாமல், மனம் வேறு பல

மனோ ராஜ்யங்கள் செய்ய விடாமல், ஸாந்தமாயிருக்கப் பழகுவது மிக்க நன்மையைக் கூட்டுவிக்கும்.

ஆமையைப்போல் நினைத்த மாத்திரத்தில் பஞ்சேந்திரியங்களை விஷயத்தினின்று மீட்பவனே ஞானி. பொதுவாக, அலைப்பாயும் மனத்தை அந்த ஈஸ்வரனிடம் ஒப்படைப்பவனே மிகப்பெரிய பராக்கிரமசாலி.

ப்ரஹ்ம தியானத்தில் ஆகாஸத்தை தியானித்து களங்கமில்லாமல் ஆத்மாவை அனுபவ சாக்ஷிப் பிரமாண மாத்திரமாக வைத்து, பஞ்ச கோசங்களையும் கடந்து அப்பால், சூன்யம் என்ற அவஸ்த்தையையும் அகற்றி, அங்கே உதயமாகிற பிரம்மாகார விருத்தியின் வஸ்து நிச்சயமாகிய, தூய அறிவு ஒளிப்பிரகாசத்தை அனுபவமாக ஆக்குங்கள்.

ஆகவே, நமது பிராணன் என்பது, ஈஸ்வரனின் ஆற்றல் என்பதினால், இதைக் கொண்டு, இங்கே நாம் செய்கின்ற வாசி எல்லாம் இந்த மனதை அடக்க எடுபடாது.

பொதுவாக, ஆழ்ந்த உறக்கத்தில் மனம் இல்லாத நிலையை ஒருவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அதே உறக்கத்தில் மனம் உண்டாகி கனவு வருவதையும் ஒருவன் பார்த்துக் கொண்டுள்ளான். அவனே இறைவன். அவனே சாக்ஷி. அவனே இந்த பிராணனையும் கையாளுகின்றான்.

ஆகவே, மனம் இல்லா விட்டாலும், பிராணன் இருக்கின்ற நிலைதான் ஆழ்உறக்கம்.

ஆக, பிராணன் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மனம் இல்லாமல் போகின்ற ஒரு நிலை நம் ஆழ்ந்த உறக்க நிலை என்பதினால், இந்த இடத்தில்தான் நாம் ஈஸ்வர நிலையில் இருக்கின்றோம் என்பதைப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இதே நிலையை நாம் இப்போது வாழுகின்ற இந்த நனவு நிலையில் புரிந்துக் கொண்டு, இந்த உடல், பொருள், ஆசி என எல்லாவற்றையும் அந்த ஈஸ்வரனுக்கு சமர்ப்பணம் செய்துவிட்டால், இங்கு "நான்" என்ற ஒன்று இல்லை, "நாம்" என்ற இந்த ஒட்டுமொத்த பிரபஞ்சமாக ஈஸ்வரன் இருக்கின்றான்.

இதுதான் தன்னை அறிந்த தத்துவ ஞானிகள் இந்த உலகத்தில் விவகாரம் செய்துகொண்டு, இந்த உடலோடும், மனதோடும் வாழுகின்ற சூக்குமம்.

சித்துநான் நிறைந்தோன் என்ற திடம் மறவாது இருந்தால்
எத்தனை எண்ணினாலும், ஏது செய்தாலும் என்ன
நித்திரை உணர்ந்த பின்பு நிற்கின்ற கனாவே போல
அத்தனையும் பொய் தானே ஆனந்த வடிவு நானே – கைவல்ய நவநீதம்.

ஆகவே, இதைப் பற்றி அறியாத மனம், இதை அறிந்துக் கொள்ள இதுப்போன்ற அத்யாத்ம கல்வியின் வாயிலாக விழித்துக் கொண்ட விவேகத்தினைக் கொண்டு, எளிதாக அந்த தூய உணர்வை தன்னுள் உணர்ந்துக் கொண்டு, அந்த பேருணர்விடம் தன்னை முழுமையாக ஒப்படைக்கும்போது, அங்கே, மனமற்ற நிலையில், அந்த தூய அறிவாகிய ஈஸ்வரன் பிரகாசிக்கின்றான்.

அதனால், அந்த நிலையில், இந்த மனம், உயிர் என்ற இருமைகள் நீங்கி, இரண்டும் ஒன்றாகிய நிலையிலே இந்த மனம் அந்த மகத்தான தூய அறிவில் (ஆத்மாவில்) இலயம் ஆகிவிடுகின்றது.

இப்போது இருப்பது ஒன்றே!

அதுவே, **ஆத்**மா. அதுவே **இறைவன்**.

ஓம் தத் ஸத்!

# உயிர்



ப்ரக்ஞன்